வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 14.03.2024 வியாழக்கிழமை இதழ் : 74 பக்கங்கள் : 12

### மனித உரிமைகள் விவகாரத்தில்

# ஐ. எம். எவ். இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து

புதுடில்லி, மார்ச் 14

**மனித உரிமைகளுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் சட்டங்களை கைவிடுமாறு அல்லது அந்தச் சட்டங்களில் திருத்தத்தை ஏற்படுத்துமாறு இலங்கையை சர்வதேச நாணய நிதியம் (ஐ. எம். எவ்) வலியுறுத்த வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் கேட்டுள்ளது.**

அரச சார்பற்ற அமைப்புகள் தொடர்பான சட்டமூலம், நிகழ்நிலை காப்பு சட்டம், பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் என்பவற்றை இலங்கை கைவிட வேண்டும் அல்லது அதனை திருத்தத்துக்கு உட்படுத்த வேண்டும் என்று கோரி ஐ. எம். எவ்வின் இலங்கைக்கான செயல் திட்டத் தலைவர் பீற்றர் ப்ரூவரை மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய பிரதிப் பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி, பொருளாதார நீதி மற்றும் உரிமைகள்

11

## தெற்காசியாவில் இலங்கையிலேயே அதிகளவான நீரிழிவு நோயாளர்கள்!



### சீனி, பால் மாவின் அதிக பாவனையே காரணம் என்கிறார் சுகாதார அமைச்சர்

கொழும்பு, மார்ச் 14

தெற்காசியாவிலேயே நீரிழிவு நோயாளர்கள் அதிகம் காணப்படும் நாடாக இலங்கை இனங்காணப்பட்டுள்ளது.

அளவுக்கதிகமான சீனி மற்றும் பால் மா பாவனையே இதற்கான பிரதான காரணம் என்று சுகாதாரத்துறை அமைச்சர் மருத்துவர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

சீனி இறக்குமதிக்காக 30 கோடி டொலரும், பால் மா இறக்குமதிக்காக 35 - 40 கோடி டொலரும் ஒதுக்கப்படுகிறது. இவற்றின் பாவனையைக் குறைப்பதன் மூலம் சுகாதாரத் துறைக்கு மாத்திரமின்றி பொருளாதாரத்துக்கும் பெரும் ஒத்துழைப்பை வழங்க முடியும் என்றும்

11

## கடலில் மூழ்கி மீனவர் மரணம்!

மன்னார், மார்ச் 14

மீன் பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் உடல் நலக்குறைவால் கடலில் தவறி வீழ்ந்து உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது

தலைமன்னாரை சேர்ந்த அவர் படகில் மீன்பிடிக்க சென்று கொண்டிருந்தபோதே தவறி கீழே விழுந்தார்.

ஏனைய

11

### சர்வதேச நாணய நிதியத்தின்

## 33 வீதமான நிபந்தனைகளை இலங்கை நிறைவேற்றவில்லை!

நியூயோர்க், மார்ச் 14

கடந்த பெப்ரவரி இறுதிக்குள், சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட வேண்டியவற்றில் 33 வீதமான நிபந்தனைகளை இலங்கை பூர்த்தி செய்யத் தவறியுள்ளதாக வெரிட்டே றிசேர்ச் நிறுவனம் கூறுகிறது.

இலங்கையின் நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளில் பெரும்பாலானவை ஆட்சியை மேம்படுத்துவதுடன் தொடர்புடையவை.

11

### மருந்து இறக்குமதி:

## மற்றோர் அதிகாரியும் கைதானார்

கொழும்பு, மார்ச் 14

தரமற்ற இம்யுனோ குளோபுலின் மருந்து இறக்குமதி தொடர்பில் மற்றோர் அதிகாரியும் நேற்று கைது செய்யப்பட்டார்.

மருந்துகள் விநியோகப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஏ. டி. சுதர்ஷன என்பவரே இவ்வாறு குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

முன்னதாக, சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் அதிகாரிகள் பலர் இந்த விவகாரத்தில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### கல்வியியல் கல்லூரிகளுக்கு

## புதிய மாணவர்கள் சேர்க்கை வர்த்தமானி நாளை வெளியீடு

கொழும்பு, மார்ச் 14

தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு புதிய மாணவர்களை ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பம் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் நாளை வெளியாகும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் ஒன்லைன் மூலம் கோரப்படவுள்ளன. அத்துடன், கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் விண்ணப்பங்களைப் பிரசுரிப்பதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

11

## இளம் குடும்பஸ்தர் கொலை 5ஆவது சந்தேகநபரும் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 14

பொன்னாலையில் இளம் குடும்பஸ்தர் கடத்திக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் மற்றொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். இவரை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட நால்வரையும் நாளை வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

வட்டுக்கோட்டை - மாவடியை சேர்ந்த பவித்திரன் (வயது 23) என்ற குடும்பஸ்தர் கடந்த திங்கட்கிழமை நள்ளிரவை அண்மித்த நேரத்தில் கடத்திச் செல்லப்பட்டு வெட்டிக் கொல்லப்பட்டார். முற்பகையே இந்த கொலைக்குக் காரணம் என்று

11

### வெடுக்குநாறிமலை விவகாரம்

## அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஆராய விக்னேஸ்வரன் அழைப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 14

வெடுக்குநாறிமலை பிரச்னை தொடர்பில் ஒன்று கூடி ஆராய முன்வருமாறு தமிழ்த் தேசியம் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வரலாற்றுத்துறை சார்ந்தோருக்கும் க. வி. விக்னேஸ்வரன் எம். பி. அழைப்பு விடுத்துள்ளார்.

சிவராத்திரி தினத்தன்று வவுனியா - நெடுங்கேணி - வெடுக்குநாறிமலை ஆலயத்தில் பொலிஸாரால் தாக்கப்பட்டு ஆலய பூசகர் உட்பட எண்மர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையிலேயே, இந்த விடயம் தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்காக தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வரலாற்றுப் பேராசிரியர்களுக்கும் விக்னேஸ்வரன் எம். பி. அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தக் கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை

11

## வவுனியா சிறைச்சாலையில் எவரும் உணவு தவிர்ப்பில் ஈடுபடவில்லை!

### சிறைச்சாலை பேச்சாளர் தெரிவிப்பு

வவுனியா, மார்ச் 14

வவுனியா சிறைச்சாலையில் எவரும் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபடவில்லை என்று சிறைச்சாலை பேச்சாளர் காமினி பீ. திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

அத்துடன், வெடுக்குநாறிமலையில் கைதாகி மறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் நேற்று மதியம் உணவை உட்கொண்டனர்

11

## சிவலிங்கம் மீது வெள்ளை நாகம்! இராணுவம் வெளியிட்ட காணொலி!

### கோயிலை பராமரிக்குமாறு கோரிக்கை


யாழ்ப்பாணம், மார்ச் 14

உயர்பாதுகாப்பு வலயமாக இருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட காங்கேசன்துறை பகுதியில் உள்ள சிறு கோவிலில் சிவலிங்கத்தை வெள்ளை நாகம் சுற்றியிருக்கும் காணொலி சமூக வலைத்தளங்களில் பிரபலமாகி வருகிறது.

காங்கேசன்துறை தெற்கில் தகரங்களால் அமைக்கப்பட்ட சிறு கோயிலிலேயே இந்தக் காணொலி எடுக்கப்பட்டதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

அந்த சிறு கோயிலில் பிள்ளையார் , சிவலிங்க உருவச் சிலைகளும் இலட்சுமியின் உருவப்படமும் உள்ளன. பௌர்ணமி தினங்களில் பாம்புகள் அடிக்கடி குறித்த ஆலயத்துக்கு

11



**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

நேற்று இந்தப் பத்தியில் சிவ பூமி தலைவரும் யாழ்ப்பாணத்தில் இன்று சைவர்களின் முகமாக இருப்பவருமான ஆறு. திருமுருகன் பற்றி எழுதியிருந்தேன்.

அதில், பாரதப் பிரதமர் மோடியின் யாழ்ப்பாண விஜயத்தின் போது, அவர் விஜயம் செய்வதற்கான ஆலயத்தைத் தேர்வு செய்யுமாறு அவரிடம் கேட்கப்பட்டிருந்ததாக எழுதியிருந்தேன். ஆனால், தனக்கு இந்தியத் தூதரகத்துடன் எந்தத் தொடர்பும் இருக்கவில்லை என்றும் அவர்கள் அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் மறைந்த திருநீலகண்டனிடம் கேட்டிருந்தனரெனவும் அவரே தன்னிடம் அதற்காக உதவி கோரியிருந்தார் என்றும் ஆறு திருமுருகன் தெரிவித்தார்.

அவர் இவ்வாறு தெரிவித்திருந்த சில மணிநேரங்களில் அந்தப் பத்தியைப் படித்துவிட்டு, லண்டனிலிருந்து ஒரு நண்பர் தொடர்பு கொண்டு சொன்னார், "நீங்கள் ஆறு. திருமுருகனாரின் இராஜதந்திரம் பற்றி சிலாகித்திருந்தீர்கள். அது சரியான கருத்துத்தான். ஆனால், அவர் நிர்மலா சீதாராமனை சந்தித்ததையும் இந்தியப் பிரதமர் மோடியை வரவேற்பதையும் காட்டி அவரை இந்திய 'அடிவருடி' என்றல்லவா சமூக வலைத்தளங்களில் விமர்சித்திருந்தார்கள்?" என்றார்.

இதுபோன்ற விமர்சனங்கள் பற்றி இந்தப் பத்தியில் பல தடவைகள் எழுதியாகிவிட்டது. இது போன்று எடுத்தெதற்கொல்லாம் ஏதாவது குறைசொல்வதும் எந்தவித ஆதாரமும் இல்லாமல் குற்றம்சாட்டுவதும் ஒருவகை மன நோய்தான் என்று நண்பருக்குச் சொல்வதைத் தவிர, வேறு பதில் எதுவும் என்னிடம் இருக்கவில்லை.

எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் இருக்கிறார். அவர் இப்படித்தான் எதைப்பற்றி கதைத்தாலும் அதற்கு எதிர்க் கருத்துத்தான் சொல்வார். ஒரு டிஜிற்றல் மீடியாவை நடத்திவரும் அவரைப் பற்றி அவரது குணாம்சங்கள் பற்றி ஒரு தடவை ஒரு மனோதத்துவ டாக்டரிடம் பேசிக்கொண்டிருந்த போது, எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த அந்த டாக்டர், "நீங்கள் அவரை ஒரு நோயாளி போலத்தான் பார்க்க வேண்டும்" என்றார்.

அதுபோன்ற கருத்துகளை முன்வைப்பவர்கள் யார் என்று நண்பருக்கும் தெரிந்துதான் இருந்தது.

அந்த லண்டன் நண்பர் இந்த விசயத்தைச் சொன்னபோதுதான், திருமுருகனார் சொன்ன மற்றுமொரு சம்பவம் ஞாபகத்துக்கு வந்தது.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்ற சில மாதங்களிலேயே புனித பாப்பரசர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தமை வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கலாம். அந்த விஜயத்தின்போது, இலங்கையிலுள்ள அனைத்து மதத் தலைவர்களையும் அவர் சந்திக்க விரும்பினார். இந்து மதத் தலைவராக நல்லை ஆதீனம் அழைக்கப்பட்டிருந்தார். அவருக்கு உதவியாக திருமுருகனும் கொழும்பு சென்றிருந்தார். பாப்பரசர் வருகை பற்றி ஏற்பாடுகளை செய்கின்ற குழுவினர் அனைத்து மதத் தலைவர்களுடன் ஒத்திகை பார்ப்பதற்காக ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாம்.

அந்தக் கூட்டத்தில், சைவ முறைப்படி நல்லை ஆதீனம் பாப்பரசருக்கு பொன்னாடை போர்த்த வேண்டும் என்று கேட்டபோது, அங்கே இருந்த கர்தினால் மல்கம் ரஞ்சித், பாப்பரசரை யாரும் தொடமுடியாது என்றும் பொன்னாடை போர்த்த முடியாது என்றும் கண்டிப்புடன் கூறிவிட்டாராம்.

திருமுருகனார் அதனைக் கேட்டு அமைதியாகி விடவில்லை. அவர் ரோமிலுள்ள பாப்பரசரின் தனிப்பட்ட செயலாளருக்கு மின் அஞ்சல் அனுப்பி பொன்னாடை போர்த்துவதற்கு அனுமதிகோர சில மணி நேரங்களிலேயே அவரிடமிருந்து அனுமதி கிடைக்க, கர்தினால் அமைதியாகவேண்டி வந்ததாம்.

அனைத்து மதத் தலைவர்களுடனான சந்திப்பில் நல்லை ஆதீனத்தை தனக்கு அருகில் இருத்தி அவரைக் கட்டித்தழுவ, ஆதீனம் பொன்னாடை போர்த்தி வரவேற்றார்.

நேற்று திருமுருகனார் எவ்வாறு பணியாற்றுகின்றார் என்பதை எழுதியிருந்தேன். அதனை மேலும், விபரிக்கவே இந்தக் கதையை எழுதவேண்டியதாயிற்று.

இனி, இந்தத் துரோகிகள் - எடுபிடிகள் என்ற விசயத்துக்கு வருவோம்.

அது ஒரு கத்தோலிக்க திருச்சபை ஏற்பாடு செய்திருந்த வைபவம். அந்த வைபவத்துக்கு அழைக்கப்பட்டிருந்த ஆறு. திருமுருகன் அங்கே முதல் வரிசையில் அமர்ந்திருந்தார். அப்போது அவரை அணுகிய ஒரு குருவானவர், அவரை அங்கிருந்து எழுந்து பின் வரிசையில் அமருமாறு கேட்டுக் கொள்ள அவரும் எதுவும் கூறாமலே பின்னால் மூன்றாவது வரிசையில் அமர்ந்துகொண்டார். ஆனால், சில விநாடிகளில் அவர் அமர்ந்திருந்த அந்த ஆசனத்தில் இலங்கை இராணுவத்தின் யாழ்ப்பாண கட்டளைத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க கொண்டுவந்து அமர வைக்கப்பட்டார்.

ஆனால், இதுபற்றி அதாவது ஒரு கத்தோலிக்க வைபவத்தில் இராணுவத்தினருக்கு இத்தனை முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது பற்றி இந்த சமூக வலைத்தள போராளிகள் எவரும் கண்டு கொள்ளவே இல்லை. அதுவே, ஆறு. திருமுருகன் ஏற்பாடு செய்கின்ற ஒரு வைபவத்தில் இராணுவத்தினரோ அல்லது இந்திய தூரக அதிகாரிகளோ கலந்து கொண்டால் அவர்கள் துள்ளிக் குதிக்கிறார்கள்.!

இதுதான் நமது துரோகி - தியாகி இடையேயான வரைவிலக்கணமோ தெரியவில்லை.!

இந்திய இராணுவம் இலங்கையில் இருந்தபோது, இந்திய குடியரசு தினத்தில் கலந்துகொண்டதற்காகவே செனட்டர் நடராசா அப்போது சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். ஆனால், இப்போது இந்திய தூதரகத்தில் நடக்கும் குடியரசு தினக் கொண்டாட்டத்தில் முதல்வரிசையில் அமர்ந்திருக்கும் கஜேந்திரகுமார், மற்றவர்களைப் பார்த்து இந்திய அடிவருடிகள் என்பது முரண்நகை.!

**- ஊர்க்குருவி.**

## 'வேள்வித் திருமகன்' திருப்பாடுகளின் நாடகம் 21ஆம் திகதி ஆரம்பமாகிறது!

யாழ்ப்பாணம், மார்ச் 14

திருமறைக் கலாமன்றத்தால் அரை நூற்றாண்டை கடந்து வரலாற்றுப் பாரம்பரியத்துடன் தொடர்ச்சியாக ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்பட்டு வருகின்ற மாபெரும் அரங்க ஆற்றுகையான திருப்பாடுகளின் நாடகம் இந்த ஆண்டு "வேள்வித் திருமகன்" என்னும் பெயரில் எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாள்களுக்கு மாலை 6.45 மணிக்கு இல. 238 ,பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

திருமறை கலாமன்றம் தனது அனைத்து வளங்களையும் ஒருங்கிணைத்து பிரமாண்டமான படைப்பாக தயாரித்து அளிக்கும் திருப்பாடுகளின் நாடகத்தை ஆண்டுதோறும் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்வையிட்டு வருகின்றார்கள்.

திருப்பாடுகளின் நாடக மரபில் தனக்கென்றொரு தனித்துவத்தை தக்கவைத்திருக்கும் திருமறைக் கலாமன்றம் இந்த ஆற்றுகையை காலத்திற்கேற்ற அரங்க நுட்பங்களை, சிந்தனைகளை உள்வாங்கி புதிய பார்வைகளுடன் மேடையேற்றி வந்துள்ளது. இம்முறை மேடையேற்றப்படும் "வேள்வித் திருமகன்" திருப்பாடுகளின் நாடகம் முதன்முதலாக 2012 ஆம் ஆண்டிலும் அதனைத் தொடர்ந்து 2014 ஆம் 2016 ஆம் ஆண்டுகளிலும் மேடையேற்றப்பட்டது. தற்போது நான்காவது தடவையாக மேடையேற்றப்படுகின்றது. இம்முறை இதற்கான நெறியாள்கையை மன்ற அரங்கக் கலைஞரான தை. யஸ்ரின் ஜெலூட் மேற்கொண்டுள்ளார்.

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் அமரர் நீ. மரியசேவியர் அடிகளார் திருப்பாடுகளின் நாடகப் பாரம்பரியத்தை தமிழ் மரபுக்குரிய தனித்துவங்களுடன் வளர்த்து வந்துள்ளார். திருப்பாடுகளின் நாடகத்துக்கான பெரும்பாலான பிரதிகளை நீ. மரியசேவியர் அடிகளாரே எழுதியுள்ளார். அவரால் இறுதியாக எழுதப்பட்ட பிரதியே "வேள்வித் திருமகன்". மரிய சேவியர் அடிகளாரால் எழுதப்பட்ட திருப்பாடுகளின் நாடகப் பிரதிகளில் இருந்து மொழி நடையிலும்,பொருள் அளிக்கையிலும் சற்று மாறுபட்டதாக எழுதப்பட்ட இப்படைப்பு வேள்விக் கருவை மையப்படுத்தியதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வழமை போலவே பிரமாண்டமான அரங்கஅமைப்பு,காட்சியமைப்பு, இசையமைப்பு, ஒலி, ஒளி போன்றவற்றுடன் அரங்கிலும் அரங்கப் பின்னணியிலுமாக இருநூறுக்கும் அதிகமான கலைஞர்களின் பங்கேற்புடன் "வேள்வித் திருமகன்," அரங்கேறத் தயாராகின்றது. (ஐ)

## காலியை சுற்றுலா துறைமுகமாக மாற்றுவதற்கு அபிப்பிராயம்!

கொழும்பு, மார்ச் 14

காலி துறைமுகத்தை சுற்றுலா துறைமுகமாக மேம்படுத்துவதற்கான அபிப்பிராயங்கள் கோரப்பட்டுள்ளன.

துறைமுகத்தை மேம்படுத்துவதற்கு பொருத்தமான முதலீட்டாளர் ஒருவரை தெரிவு செய்யவுள்ளதாக துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் ருவான் சந்திர தெரிவித்தார்.

சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச்செல்லும் கப்பல்கள் மற்றும் படகுகள் வருகை தரும் வகையில் துறைமுகம் மேம்படுத்தப்படும் என செயலாளர் குறிப்பிட்டார்.

## உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள் நியமனம்; எதிரான மனுக்களை விசாரிக்க அனுமதி!

கொழும்பு, மார்ச் 14

2021ஆம் ஆண்டு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கான பதவி உயர்வில் தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்று தீர்ப்பளிக்கக் கோரி தலைமை பொலிஸ் பரிசோதகர்கள் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட 9 அடிப்படை உரிமை மனுக்களை விசாரணை செய்ய உயர்நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

குறித்த மனுக்களை பரிசீலித்த பின்னர், காமினி அமரசேகர, யசந்த கோதாகொட மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகிய மூவரடங்கிய உயர்நீதிமன்ற அமர்வு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

இதன்படி, இந்த மனுக்கள் தொடர்பான ஆட்சேபனைகளை நேற்றிலிருந்து ஆறு வாரங்களுக்குள் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ள பொலிஸ் மா அதிபர், தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் ஏனையோருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அந்த ஆட்சேபனைகள் தொடர்பான ஆட்சேபனைகளை அன்றிலிருந்து நான்கு வாரங்களுக்குள் தாக்கல் செய்ய மனுதாரருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதன்பிறகு, ஜூலை 10 மற்றும் 11 ஆகிய திகதிகளில் தொடர்புடைய மனுக்கள் விசாரிக்கப்படும் என்று பெஞ்ச் தெரிவித்துள்ளது.

இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நிர்மலன் விக்னேஸ்வரன், 230 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிகள் தற்போது வெற்றிடமாக உள்ளன. பிரதிவாதிகளின் நியமனத்துக்கு நீதிமன்ற உத்தரவுக்கு அமைய நடவடிக்கை எடுத்து வருவதாகவும் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

பணிமூப்பு மற்றும் திறமை தொடர்பான தகுதிகளை பூர்த்தி செய்யும் உதவி பொலிஸ் கண்காணிப்பாளர் பதவிக்கு பதவி உயர்வு வழங்காததன் மூலம் தங்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்று தீர்ப்பளிக்கக் கோரி பொலிஸ் ஆய்வாளர்கள் குழு உயர்நீதிமன்றத்தில் இந்த அடிப்படை உரிமை மனுக்களை தாக்கல் செய்துள்ளது.

## சிறப்பு சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 14

தெல்லிப்பழை - வீமன்காமம் வடக்கு குருநாதடி இராஜராஜேஸ்வரி அம்பாள் திருக்கோவில் வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டுச் சிறப்புச் சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

ஆலய பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் 30ஆம் திகதி சனிக்கிழமை வரை தினமும் மாலை 7.00 மணிக்குச் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

இதில், சைவப் புலவர்கள் செ. த. குமரன், பொன். சந்திரவேல், இளம் சைவப்புலவர்கள் க. கயிலைநாதன், நித்திய பாபுதரன், த. மனோஜ்குமார், க. கயிலைவாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். (ஐ)

## சுக்கிரவாரசொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 14

நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடைபெறும் சுக்கிர வார சிறப்புச்சொற்பொழிவு ஆலயத்தின் சண்முக விலாச மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு சிவநெறிப் பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாத குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து சொற்பொழிவை சைவப்புலவர் ச. முகுந்தன் "ஆலய வழிபாடும் சமூக மேம்பாடும்" என்னும் விடயப்பொருளில் ஆற்றுவார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
14.03.2024 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், பங்குனி 01

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ரணிலின் கருத்தில் உண்மையிருக்கின்றதா?

"முழுமையான புரிதலின்றி அரசியல் வாக்குறுதிகளை வழங்குவதிலிருந்து விடுபட்டு யதார்த்தத்தை எதிர்கொள்வது முக்கியம்" என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார். ஆனால், இவ்வாறு கூறும் ரணில் விக்கிரமசிங்கவோ தான் கூறிய விடயங்களில் எந்தளவு முன்னோக்கி பயணித்திருக்கின்றார் என்பதையும் யதார்த்தபூர்வமாக சிந்திக்க வேண்டும். புது வருடத்துக்கு முன்னால் அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தப் போவதாகக் குறிப்பிட்டார். ஆனால், எதுவும் நடைபெறவில்லை. ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நம்பிக்கை ஊட்டினார். ஆனால், இறுதியில் வழமைபோல் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டனர். இப்போதும் தன்னால் பல்வேறு பிரச்னைகளைத் தீர்க்க முடியுமென்று கூறுகின்றார். ஆனால், அனைத்தும் உதட்டசைவுகளாகவே இருக்கின்றன.

ரணில் கெட்டித்தனமானவர் - விடயங்களை அறிந்தவர் - அவ்வாறான ஒருவரால்தான் விடயங்களை தீர்க்க முடியும் என்று ஒரு பார்வையுண்டு - அவ்வாறான பார்வைகளில் தவறில்லை. ஆனால், பாதிக்கப்பட்ட - தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற தமிழ்த் தேசிய இனம் நம்பிக்கை கொள்வதற்கு சில விடயங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். இதில் ரணில் விக்கிரமசிங்கவை மட்டும் குற்றஞ்சாட்டிவிட்டு தமிழ் கட்சிகளின் தலைவர்கள் என்போர் அமைதியாக ஓய்வெடுக்க முடியாது.

ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசப்பட்டபோது அதன் சாத்தியமின்மைகளை கருத்தில்கொண்டு சூழலுக்கு ஏற்றவாறு விடயங்களை கையாண்டிருக்க வேண்டும். அரசமைப்பில் இருப்பவற்றை அமுல்படுத்தும் விடயத்தில் கவனம் செலுத்தியிருக்க வேண்டும். அவ்வாறு செயல்பட்டிருந்தால் விடயங்களில் சில முன்னேற்றங்களை கண்டிருக்கலாம். ஆனால், அந்த விடயத்தில் கூட்டமைப்பின் தலைமை தவறிழைத்திருந்தது.

ஆனால், யதார்த்தமான வாக்குறுதிகளை முன்வைக்க வேண்டும் என்று இப்போது கூறும் ரணில் விக்கிரமசிங்க அதிகாரமுள்ள பிரதமராக இருந்தபோது ஏன் யதார்த்தபூர்வமான விடயங்களை சுட்டிக்காட்டவில்லை - யதார்த்தமற்ற அரசியல் யாப்பில் நேரத்தை விரயம் செய்திருந்தார் ? தென்னிலங்கை அரசியல் சூழல் சில விடயங்களை முன்னெடுப்பதற்கு உகந்ததாக இல்லை என்பது உண்மைதான். ஆனால், அரசமைப்பில் இருப்பவற்றை அமுல்படுத்துவதன் ஊடாக முன்னோக்கி செல்வதற்கான நகர்வுகளை முன்னெடுப்பதில்கூட இதுவரையில் முன்னேற்றங்களை எவருமே நிரூபிக்கவில்லை.

ரணிலால் சில விடயங்களை முன்னெடுத்திருக்க முடியும். அதற்கான ஆற்றல் அவருக்கு உண்டு. ஆனால், அவரும் பத்தோடு பதினொன்றாக இருக்கின்ற தென்னிலங்கை அரசியல்வாதிகள் போன்றுதான் செயல்பட எத்தனிக்கின்றார். அவரின் பக்கத்திலிருந்தும் இதுவரையில் ஆக்கபூர்வமான அணுகுமுறைகள் எதுவும் நடைபெறவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் ரணில் விக்கிரமசிங்க ஒரு யதார்த்தமான அரசியல்வாதியாகத் தெரியவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை தமிழ் மக்கள் ஆதரிப்பதற்கான காரணங்கள் எவையும் பிரகாசமாக இல்லை. இவ்வாறனதொரு பின்னணியில்தான் சிவில் சமூக குழுக்கள் ஒரு தமிழ் பொதுவேட்பாளர் தொடர்பில் பேசி வருகின்றன.

# திறன்மிக்க டிஜிட்டல் கண்டுபிடிப்பாளர்களை உருவாக்க யாழ். நகரில் ஒரு நிறுவனம்

## சனிக்கிழமை தனது பயணத்தில் காலடி வைக்கிறது

Unicom TIC, வருங்கால டிஜிட்டல் கண்டுபிடிப்பாளர்களை இனங்கண்டு பயிற்சி அளித்து வல்லுநராக்க உதவும் ஒரு புதிய நிறுவனம் ஆகும். இந்நிறுவனம் எதிர்வரும் சனிக் கிழமை 16 ஆம் திகதி தனது பயணத்தில் காலடி எடுத்துவைக்கவும் அதன் அதிநவீன வசதிகளை வெளியிடவும் திட்டமிட்டுள்ளது.

இந்நிறுவனம் இலங்கையின் தொழில் நுட்ப முன்னேற்றத்திற்கு கணிசமாக பங்களித்து மிகவும் திறமையான தொழில் நுட்பவியலாளர்களை உருவாக்குவதை நோக்கமாக கொண்டுள்ளது. இதன்மூலம் இலங்கையில் திறன்மிக்க டிஜிட்டல் கண்டு பிடிப்பாளர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முயற்சிக்கிறது. தொழிற்றுறை வல்லுநர்களால் கற்றுத்தரப்படும் ஆழமான, தொழில் சார்ந்த கல்விப்பட்டறிவை வழங்கி இளைய தலைமுறைக்கு ஊக்கமளித்து வளர்ப் பதை நோக்கமாக கொண்டுள்ளது.

கடுமையான தேர்வு மூலம், தர்க்க சிந்தனை கொண்டவர்களை இனங்கண்டு, அவர்களுக்கு வேகமான தொழில்நுட்பப் பயிற்சி வழங்குகிறது. இப்பயிற்சி உலகளாவிய தொழில்நுட்ப துறைசார் வல்லுநர்களால் வழங்கப்படுகிறது. பயிற்சியாளர்களுக்கு ஒரு வருட காலத்தில் வல்லுநராவதற்கும், தொழில்பெறுவதற்கும் வேண்டிய திறன்களை வழங்குவதுடன், தொழில் வாய்ப்பை வழங்குவதையும் உறுதி செய்கிறது.

இந்த நிறுவனம், பயிற்சியாளர்களுக்கு 100 வீத உதவித்தொகை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு ஏற்படும் பொருளாதார நெருக்கடியை நீக்குவதோடு, வேலை வாய்ப்புகளை வழங்குவதற்கும் உறுதிஅளிக்கிறது.

Unicom TIC பயிற்சியாளர்களை உலக அளவில் தொழிநுட் பத் தலைவர்களாக மாற்றுவதற்கான வழியை உருவாக்கிக்கொடுக்கிறது. இந்நிறுவனம் அதிநவீன கணினி ஆய்வகம், விரிவுரை வசதிகளைக் கொண்ட நிறுவனமாக யாழ் நகரில் அமைக்கப் பட்டுள்ளது. இங்குள்ள வசதிகள் தொழிற்றுறை தர நிலைகளுடன் இணைந்த ஒரு அதிவேக கற்றல் அனுபவத்தை வழங்கக்கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. டெவலப்பர்களை மட் டுமே உருவாக்க விரும்பவில்லை, மாறாக செழித்துப் பிரகாசிக்கும் தொழில் நுட்ப வல்லு நர்களை உருவாக்கவே விரும்புகிறது.

எதிர்வரும் சனிக்கிழமை இந்நிறுவனத்தின் தொடக்க விழா நிகழவிருக்கிறது. அந்நிகழ்வில் பயிற்சியாளர்களிற்கான உதவித் தொகை வழங்கும் நிகழ்வும் இடம் பெறும். தொடர்ந்து இந்நிறுவனம் 01.04.2024 முதல் உத்தியோக பூர்வமாக செயல்படத் தொடங்கும்.

இலங்கையில் தொழில்நுட்ப வளர்ச்சியை நோக்கிய பயணத்தில் தன் இலக்கை எட்டும் வரைக்கும் இப்பயணத்தில் பங்குபெற அனைத் துச் சமூகத்தவர்கள், பங்குதாரர்கள் மற்றும் ஊடகங்களுக்கும் இந்நிறுவனம் அழைப்பு விடுத்து நிற்கிறது.

மேலும் தகவலுக்கு www.unicomtic.org ஐப் பார்வையிடலாம்.

# மீண்டும் நாடு திரும்பும் வைத்தியர்கள் பற்றாக்குறை விரைவில் தீர்க்கப்படும்!

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 14

நாட்டை விட்டு வெளியேறிய பல வைத்தியர்கள் தற்போது மீண்டும் நாடு திரும்புவதால், இலங்கையின் சுகாதாரத் துறையில் உள்ள மருத்துவர்களின் பற்றாக்குறை எதிர்காலத்தில் தீர்க்கப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மருத்துவ சேவைகளின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் ஜி. விஜேசூரிய, ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

விசேட வைத்தியர்கள் மற்றும் தாதிகள் உட்பட பல வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியதையடுத்து இலங்கையில் அண்மையில் வைத்தியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றுநோய் மற்றும் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் விளைவாக சுகாதாரப் பணியாளர்கள் நாட்டை விட்டு அதிகளவில் வெளியேறினர்.

இந்நிலையில், நாட்டை விட்டு சென்ற விசேட வைத்தியர்கள் உட்பட பல வைத்தியர்கள் தற்போது இலங்கைக்கு திரும்பி வருவது அவதானிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார். நாட்டை விட்டு வெளியேறும் சுகாதா ரப் பணியாளர்களின் எண்ணிக்கையும் வீழ்ச்சியடைந்துள்ளதாக விஜேசூரிய தெரிவித்தார்.

பல வைத்தியர்கள் தமது விடுமுறைகளை இரத்து செய்துவிட்டு இலங்கைக்குத் திரும்பி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், இலங்கைக்குத் திரும்பும் வைத்தியர்கள் மூலம், தேவையான வைத்திய சாலைகளுக்கு விசேட வைத்தியர்களை நியமிக்க சுகாதார அமைச்சினால் முடிவெடுக்கப்பட்டுள்ளதாகவும் இதன்போது அவர் குறிப்பிட்டார். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**மார்ச் - 14 வியாழக்கிழமை**
**சோபகிருது வருடம் - பங்குனி 01**

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 10.30 - 12.00 |
| ராகு காலம் | : | 01.30 - 03.30 |
| திதி | : | சூன்ய |




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில வேலைகளை உங்கள் மேற்பார்வையிலேயே முடிப்பது நல்லது. உத்தியோகத்தில் மறைமுக அவமானம் வந்து நீங்கும். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**இடபம்**
எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். பிள்ளைகளை அன்பால் அரவணைத்துப் போங்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும். அலைச்சலுடன் ஆதாயம் தரும்.

**மிதுனம்**
திட்டமிட்ட காரியங்கள் கைகூடும். பிள்ளைகள் வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். மதிப்புக் கூடும் நாள்.

**கடகம்**
குடும்பத்திலஉணர்ச்சிப்பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாகப் செயல்படுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். மரியாதை கூடும்.

**சிம்மம்**
கடந்த 2 நாட்களாக கணவன்- மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும்.வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார். மனநிறைவு கிட்டும்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் வேலையாட்களுடன் போராட வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் அதிகாரி உங்களை புரிந்து கொள்ள மாட்டார்.

**துலாம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் புது பொறுப்பை ஏற்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**விருட்சிகம்**
உற்சாகமாக இருப்பீர்கள். பழைய உறவினர், நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். அமோகமான நாள்.

**தனுசு**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள்.

**மகரம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள்.வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக்கொடுத்து வேலை வாங்குவீர்கள். உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். தைரியம் கூடும் நாள்.

**மீனம்**
கடந்த 2 நாட்களாக இருந்த மன உளைச்சல் நீங்கி மன அமைதி கிட்டும். எதிர்பார்த்த நல்ல செய்தி வரும். வியாபாரம் சூடு பிடிக்கும். புதுவாய்ப்புகள் தேடி வரும். மனம் தெளிவு பெறும் நாள்.

# இலங்கை தமிழர்களையும் வஞ்சிக்கும் குடியுரிமை திருத்தத்தை மீளப்பெறுக

## தமிழக அரசியல் கட்சிகள் தெரிவிப்பு

*சென்னை, மார்ச் 14*

இலங்கை தமிழர்கள், இஸ்லாமியர்களை வஞ்சிக்கும் குடியுரிமை திருத்த சட்டத்தை மத்திய அரசு திரும்ப பெற வேண்டும் என பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் வெளியிட்ட அறிக்கை:

அ. தி. மு. க. பொதுச்செயலாளர் பழனிசாமி கூறுகையில், மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தும் வகையில் தேர்தல் ஆதாயத்துக்காக குடியுரிமை திருத்தச் சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் மாபெரும் வரலாற்று பிழையை மத்திய அரசு செய்துள்ளது.

அகதிகளுக்காக கொண்டுவரப்பட்ட இந்த சட்டத்தை இஸ்லாமியர்களுக்கும், இலங்கை தமிழர்களுக்கும் எதிராக அமுல்படுத்த நினைத்தால் அதை அ. தி. மு. க. ஒருபோதும் அனுமதிக்காது. இதற்கு எதிராக நாட்டு மக்களுடன் இணைந்து அ. தி. மு. க. ஜனநாயக ரீதியாகவும் போராடும்.

தமிழக காங்கிரஸ் தலைவர் கு.செல்வப்பெருந்தகை கூறுகையில், தேர்தல் திகதி அறிவிப்பதற்கு சில நாட்களே இருக்கும் நிலையும் குடியுரிமை சட்டத் திருத்தம் நடைமுறைக்கு வந்திருக்கிறது. இது அனைத்து குடிமக்களுக்கும் சம உரிமை வழங்கும் அரசியலமைப்பு சட்டத்தின் 14ஆவது பிரிவை மீறும் செயலாகும்.

தேர்தல் நன்கொடை விவகாரத்தில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் ஏற்பட்டுள்ள கடுமையான பாதிப்பை திசைதிருப்பவே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இஸ்லாமியர்களையும், இலங்கை தமிழர்களையும் வஞ்சிக்கும் குடியுரிமை திருத்த சட்டத்தை தமிழகத்துக்குள் அனுமதிக்க மாட்டோம்.

மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தெரிவிக்கையில்,

காஷ்மீர் சிறப்பு உரிமைப் பறிப்பு, பாபர் மசூதி இடிப்பு வழக்கில் மோசடியான தீர்ப்பு, தேசிய குடிமக்கள் பதிவேடு, குடியுரிமை திருத்தச் சட்டம் என இந்தியாவை சட்டபூர்வமாகவே இந்து ராஷ்டிரமாக அறிவிப்பதற்கான நடவடிக்கைகளில் பா. ஜ. க. ஈடுபட்டு வருகிறது.

குடியுரிமை சட்டத் திருத்தம் இந்தியாவில் குடிபெயர்ந்து வாழ்ந்துவரும் முஸ்லிம்களை மட்டும் தனிமைப்படுத்தி, ஒதுக்குகிறது. இதனை நடைமுறைப்படுத்த ஆணை பிறப்பித்திருப்பது கடும் கண்டனத்துக்குரியது.

தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த்,

மதத்தால், மொழியால், ஜாதியால், உணர்வால் ஒற்றுமையாக இணைந்து கலாசாரம் நிறைந்த நாடாக உலக நாடுகளுக்கு எடுத்துக்காட்டாக இந்தியா திகழ்ந்து கொண்டிருக்கிறது. இந்நிலையில் குடியுரிமை திருத்த சட்டத்தின் மூலம் நாட்டு மக்களை பிளவுபடுத்துவதை தேமுதிக என்றைக்கும் ஏற்காது.

நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறுகையில்,

இஸ்லாமியர்களைத் தனிமைப்படுத்தியும், இலங்கை தமிழர்களை புறக்கணித்தும் கொண்டு வரப்பட்டுள்ள குடியுரிமை திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்த மத்திய அரசு ஆணை வெளியிட்டிருப்பது கண்டனத்துக்குரியது. வேற்றுமையில் ஒற்றுமை காணும் பன்முகத்தன்மை கொண்ட நம் நாட்டை மத ரீதியாகப் பிரிக்கவே பா. ஜ. கவின் இச்செயல் வழிவகுக்கும்.

தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய்: சமூக நல்லிணக்கத்துடன் நாட்டு மக்கள் அனைவரும் வாழும் சூழலில், பிளவுவாத அரசியலை முன்னிறுத்தி செயல்படுத்தப்படும் இந்திய குடியுரிமை திருத்தச் சட்டம் போன்ற எந்த சட்டமும் ஏற்கத்தக்கது அல்ல. தமிழகத்தில் இச்சட்டத்தை நடைமுறைப்படுத்த மாட்டோம் என ஆட்சியாளர்கள் உறுதி அளிக்க வேண்டும் - என்றார்.

(ஐ)

# தமிழர் உணர்வை கொச்சைப்படுத்த பொய்கள், அவதூறை பரப்புகின்றனர்

## முதல்வர் ஸ்டாலின் கவலை

*கோவை, மார்ச் 14*

தமிழர்களின் உணர்வுகளையும் சிலர் கொச்சைப்படுத்து வகையில் பொய்களையும் அவதூறுகளையும் பரப்புகின்றனர் என்று முதல்வர் மு. க. ஸ்டாலின் கவலை தெரிவித்துள்ளார்.

கோவையில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற அவர் ஆற்றிய உரையில்,

மக்களுக்கான முத்திரை திட்டங்களை சிந்தித்து உருவாக்குவதால்தான் தமிழ்நாட்டின் தொழில்வளம் உயர்கிறது. வேலைவாய்ப்பு பெருகுகிறது, பொருளாதாரம் வளர்கிறது. ஒட்டுமொத்த தமிழ்நாடும் முன்னேறுகிறது. அதை பார்த்து சிலர் பொறாமைப்பட்டு தமிழ்நாட்டு மக்களையும், தமிழர்களின் உணர்வுகளையும் சிலர் கொச்சைப்படுத்துவகையில் பொய்களையும் அவதூறுகளையும் பரப்ப வட்ஸ்-அப் பல்கலைக் கழகம் நடத்துகின்றனர்.

அவர்களுக்கெல்லாம் நீங்கள் தக்க பாடம் புகட்டும் நேரம் வந்துவிட்டது. நம் மண்ணை, நம் தமிழை, நம் தமிழ்நாட்டை, நம் பண்பாட்டை, நம் பெருமையை பழிப்பவர்களுக்கு தக்க பாடம் புகட்டும் நேரம் வந்துவிட்டது - என்றார்.

(ஐ)

# போதைப் பொருளை ஒழிக்க மக்களுடன் சேர்ந்து யுத்தம்

## அண்ணாமலை தெரிவிப்பு

*சென்னை, மார்ச் 14*

போதைப் பொருட்களை முற்றிலுமாக ஒழிக்க மக்களுடன் சேர்ந்து பெரிய யுத்தம் நடத்த வேண்டும் என்று பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை கேட்டுக் கொண்டார்.

தமிழகத்தில் போதைப் பொருட்கள் புழக்கம் அதிகரித்திருப்பதாக கூறி, தி. மு. க. அரசை கண்டித்து தமிழக பா. ஜ. க. சார்பில் சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில், கலந்துகொண்ட மாநிலத் தலைவர் அண்ணாமலை பேசியவை வருமாறு,

தமிழகத்தில் போதைப் பொருட்கள் புழக்கம் அதிகரித்துள்ளது. அதனால், பாடசாலை ல்லூரிகளில் இருந்து வீட்டுக்கு வரும் குழந்தைகளின் பைகளில் ஏதாவது இருக்குமோ என்ற அச்சத்தில் தாய் தேடிப் பார்க்கும் அளவுக்கு தி. மு. க. அரசு நடந்து கொண்டிருக்கிறது. எந்தத் தாய்க்கும் இந்த நிலை வராமல் இருக்க பா. ஜ. க. ஆட்சிக்கு வர வேண்டும் - என்றும் அவர் கூறினார்.

(ஐ)

# பா. ஜ. கூட்டணி இந்த வாரம் இறுதியாகும்!

*சென்னை, மார்ச் 14*

தமிழ்நாட்டில் பா. ஜ. க. தனது தலைமையிலான கூட்டணியை இறுதி செய்வதற்கு அந்தக் கட்சி தீவிரம் காட்டி வருகின்றது.

பா. ஜ. க. கூட்டணியில் தமிழ் மாநில காங்கிரஸ், புதிய நீதிக்கட்சி, இந்திய ஜனநாயக கட்சி, இந்திய கல்வி மக்கள் முன்னேற்ற கழகம், தமிழக மக்கள் முன்னேற்ற கழகம் ஆகிய கட்சிகள் உள்ளன.

இதில் புதிய நீதிக்கட்சி, இந்திய ஜனநாயக கட்சிக்கு தலா ஒரு தொகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவர்கள் பா.ஜ.க. கட்சியில் தாமரை சின்னத்தில் போட்டியிடவுள்ளனர்.

முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் பா. ஜ. கவுடனான கூட்டணியை உறுதி செய்தார். இதன்போது, போட்டியிட விரும்பும் தொகுதிகள் அடங்கிய பட்டியலையும் வழங்கினார். இதேபோல், அ. ம. மு. க. தலைவர் டி.டி.வி. தினகரனும் பா.ஜ.க. கூட்டணியை உறுதி செய்துள்ளார். இந்தக் கட்சிக்கு 2 அல்லது 3 தொகுதிகள் ஒதுக்கப்படலாம் என்று கூறப்படுகின்றது.

இதுதவிர, பாட்டாளி மக்கள் கட்சியும் கூட்டணியில் இணைய வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகின்றது. அத்துடன், இந்த வாரத்துக்குள் பா. ஜ. க. தலைமையிலான கூட்டணி உறுதி செய்யப்படும். (ஐ)

# ஐக்கிய மக்கள் சக்தியில் 3இல் 2 பேர் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைவர்!

## கூறுகின்றார் ஆசு மாரசிங்க



**கொழும்பு, மார்ச் 14**

**ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து மூன்றில் இரண்டு பேர் ஐக்கிய தேசிய கட்சியுடன் மீண்டும் இணைந்து கொள்ளவுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப ரணில் விக்கிரமசிங்கவினால் மாத்திரமே முடியும் என்ற கருத்து தற்போது நாடுபூராகவும் பரவி வருகிறது. கடந்த கால தேர்தல்களை ஆராய்ந்து பார்த்தால், 2020 பொதுத தேர்தலில் வாக்களிக்காமல் இருந்த ஐக்கிய தேசிய கட்சி ஆதரவாளர்களின் தொகை 22 இலட்சமாகும். அதேநேரம் ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து பிரிந்து சென்று ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துகொண்டவர்களில் பலர் தற்போது மீண்டும் எம்முடன் இணைந்து கொள்ள கலந்துரையாடி வருகின்றனர்.

எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து மூன்றில் இரண்டுபேர் எம்முடன் இணைந்து கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது. 2019 ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாச 55இலட்சம் வாக்குகளை பெற்றார். அது நூற்றுக்கு 41 வீதமாகும்.

அதேநேரம் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு 27 இலட்சம் வாக்குகளே கிடைத்தது. அது நூற்றுக்கு 23வீதமாகும். அதாவது 41 வீதத்தில் இருந்து 23வீதத்துக்கு குறைவடைந்தது. ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி சார்ப்பாக ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்க நாங்கள் பிரேரித்திருக்கிறோம்.

அவர் கட்சி சார்பற்ற வேட்பாளராக களமிறங்குவார். சுமார் 40 இலட்சம் வாக்குகளை அடிப்படையாகக் கொண்டே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி வேட்பாளர் போட்டியில் களமிறங்குகிறார். நாட்டின் எதிர்கால சந்ததியினருக்காக நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியுமான ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க மாத்திரமாகும் என்பதை நாட்டில் இருக்கும் படித்த, உயர் மட்டத்தினர் உணர்ந்து வருகின்றனர். அதனால் மீண்டும் நாட்டுக்கு பரீட்சித்துப்பாக்கும் தலைவர் தேவையில்லை-என்றார். (அ)



சமுத்திர பாதுகாப்பு:

# அவுஸ்திரேலிய நிபுணர்களுடன் வடமாகாண ஆளுநர் சந்திப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 14

சமுத்திர பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான ஆரம்பகட்ட கள ஆய்வில் ஈடுபட்டுள்ள அவுஸ்திரேலிய நிபுணர்கள் குழாம், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை சந்தித்து கலந்துரையாடினர்.

இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதரகத்தின் அரசியல் மற்றும் பொருளாதார துறையின் முதலாம் நிலை செயலாளரின் தலைமையில் குறித்த நிபுணர்கள் குழாம் ஆளுநரை சந்தித்து கலந்துரையாடினர்.

வடக்கு மாகாண மக்களின் தற்போதைய வாழ்வியல் செயற்பாடுகள், பாதுகாப்பு, சுகாதாரம், சுற்றுலாத்துறை, உட்கட்டமைப்பு வசதிகள், சமுத்திர பாதுகாப்பு, கடற்றொழில் செயற்பாடுகள், கன்னிவெடி அகற்றுதல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் அவுஸ்திரேலிய நிபுணர்கள் குழாம், ஆளுநரிடம் கேட்டறிந்துக்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# நாரம்மல பகுதியில் சாரதி பலி; விசாரணைக்கு திகதி அறிவிப்பு!

கொழும்பு, மார்ச் 14

நாரம்மல பகுதியில் பொலிஸ் உத்தியோகத்தரின் துப்பாக்கி பிரயோகத்தில் பாரவூர்தி சாரதி ஒருவர் உயிரிழந்தமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு திகதியிடப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி குறித்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம் முன்னிலையில் இந்த மனு அழைக்கப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

200 மில்லியன் ரூபாய் நட்டஈடு கோரி உயிரிழந்த சாரதியின் மனைவி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

பிரதிவாதிகளான பொலிஸ் உத்தியோகத்தர்கள் சார்பில் சட்டத்தரணிகள் மன்றில் முன்னிலையாகவில்லை.

சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி ஷமிந்த விக்ரம, குறித்த சந்தர்ப்பத்தில் சட்டமா அதிபரை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்த வுள்ளதாக தெரிவித்துள்ளார்.

நாரம்மல, தம்பெலஸ்ஸ பகுதியில் கடந்த 18ஆம் திகதி பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் குறித்த பாரவூர்தி சாரதி உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தம்பெலஸ்ஸ பகுதியில் உள்ள பொலிஸ் சோதனைச் சாவடிக்கு அருகில், பாரவூர்தியொன்றை நிறுத்துமாறு சிவில் உடையில் இருந்த பொலிஸார் சமிக்ஞை செய்துள்ளனர்.

குறித்த சமிக்ஞையை மீறிய அதன் சாரதி பாரவூர்தியை பொலிஸார் பின்தொடர்ந்து சென்று நிறுத்தியுள்ளனர்.

இதனையடுத்து பொலிஸார் குறித்த பாரவூர்தியை சோதனையிட்டபோது, அதிகாரிகளில் ஒருவரின் துப்பாக்கி இயங்கியதில் பாரவூர்தியின் சாரதி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மின்சார சபை மறுசீரமைப்பு வரைவை இறுதி செய்ய ஏற்பாடு

கொழும்பு, மார்ச் 14

மின்சார சபையை மறுசீரமைப்பது தொடர்பான வரைவை விரைவாக இறுதி செய்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்துடன் கலந்துரையாடி வருவதாக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

சட்டமா அதிபரிடமிருந்து தெளிவுபடுத்தல்கள் மற்றும் வரைவுக்கு தேவையான அமைச்சரவை அங்கீகாரம் என்பன கிடைத்த பின்னர் அதனை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மின்சார சபையின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது இந்த விடயம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. (அ)

# வடக்கு மாகாண ஆளுநருடன் இந்தியப் பதில் தூதுவர் பேச்சு

யாழ்ப்பாணம், மார்ச் 14

வடக்கு மாகாணத்தில் காணப்படும் சுற்றுலாத் தலங்களை அபிவிருத்தி செய்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக இலங்கைக்கான இந்திய பதில் தூதுவர் சத்வஞ்சல் பாண்டே உள்ளிட்ட குழுவினர் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சாள்ஸைச் சந்தித்து கலந்துரையாடினர்.

பலாலி விமான நிலைய அபிவிருத்தி, சென்னையிலிருந்து பலாலிக்கான விமான சேவையை அதிகரித்தல், காங்கேசன்துறைக்கும் தூத்துக்குடிக்குமான பயணிகள் கப்பல் சேவை போன்ற திட்டங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அத்துடன் இயற்கை சக்தி வளங்களைப் பயன்படுத்தி மின்னுற்பத்தியை மேற்கொள்ளுதல் மற்றும் வடக்கில் முன்னெடுக்கக்கூடிய ஏனைய அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும் ஆளுநருடன் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு துறைமுக நகரத் திட்டம் உதவும்

## சீன தூதுவர் கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 14

இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு துறைமுக நகரத் திட்டம் மிகப்பெரிய பங்களிப்பை வழங்கும் என இலங்கைக்கான சீன தூதுவர் ஹீ சென்ஹொங் கூறினார்.

கொழும்பு துறைமுக நகரின் வர்த்தக மத்திய நிலையத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன் தினம் நடைபெற்றது.

கொழும்பு துறைமுக நகரத்தின் வர்த்தக மத்திய நிலையத்திற்கான நிர்மாணப் பணிகளை பிரதமர் தினேஷ் குணவர்தன ஆரம்பித்து வைத்தார். கடல் நிரப்பப்பட்டு 269 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் கொழும்பு துறைமுக நகரம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இதன் நிர்வாக செயற்பாட்டிற்காக தனியான சட்டமொன்றை பாராளுமன்றம் நிறைவேற்றியுள்ளதுடன், அது கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

கொழும்பு துறைமுக நகரம் தற்போது நிதி நகரமாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஊக்குவிப்பு நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மே மாதத்தில் சபாநாயகரின் தலைமையில் 14 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில், துறைமுக நகரத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டது.

கொழும்பு துறைமுக நகரத்தில் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கலப்பு அபிவிருத்தி திட்டத்திற்கான முதலீடு இடம்பெறவுள்ளதாக 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 17 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

ஈழநாடு



# அமெரிக்க உளவு விமானம் மூலம் இரத்மலானையில் விசேட பயிற்சி

## கடல் கண்காணிப்பை வலுப்படுத்துவதற்காக













கொழும்பு, மார்ச் 14

**அமெரிக்க உளவு விமானத்தை பயன்படுத்தி இரத்மலானை விமான நிலையத்தில் விசேட பயிற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.**

**அமெரிக்க பாதுகாப்பு திணைக்களத்தின் தலையீட்டுடன் இந்த பயிற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.**

அமெரிக்க பாதுகாப்பு திணைக்களத்திற்கு சொந்தமான இந்த விமானத்தில் அதன் ஊழியர்களும் இரத்மலானை விமான நிலையத்திற்கு வருகை தந்துள்ளனர்.

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க, இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், விமானப்படை தளபதி, கடற்படை தளபதி ஆகியோர் நேற்று முன் தினம் இவர்களை வரவேற்றுள்ளனர்.

தேசிய பாதுகாப்பை ஸ்திரப்படுத்தும் வகையிலும் கடல் எல்லையை கண்காணிப்பது தொடர்பிலும் இதன்போது விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளது.

புலனாய்வு தகவல்கள் மற்றும் உளவு செயற்பாடுகள் தொடர்பில் இதன்போது ஆராயப்படவுள்ளது.

இலங்கையின் கடல்சார் விழிப்புணர்வை மேம்படுத்துதல், இலங்கை விமானப்படை மற்றும் கடல்சார் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள முப்படைகளின் விமானிகளுக்கு பயிற்சி வழங்குவதே இதன் நோக்கமாகும்.

அமெரிக்காவுடனான எதிர்கால ஒருங்கிணைப்பு செயல்பாடுகளுக்கான வாய்ப்பை தயார்படுத்துவதுடன், இலங்கை அரசாங்கத்திற்கும் அமெரிக்காவுக்குமிடையிலான தொடர்பையும் உறவுகளையும் ஸ்திரப்படுத்துவதே இந்த கூட்டுமுயற்சியின் மற்றுமொரு நோக்கம் என இலங்கை விமானப்படை அறிவித்துள்ளது.

பாதுகாப்பான மற்றும் வளமான இந்தோ- பசிபிக் பிராந்தியத்தை மேம்படுத்தும் அமெரிக்க கொள்கையின் கீழ் இந்த பயிற்சி முன்னெடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் கடல் வளங்களை சிறந்த முறையில் பாதுகாப்பதற்கும் சட்டவிரோத ஆட்கடத்தலை தடுப்பதற்கும் பிரத்தியேக பொருளாதார வலயத்தை கண்காணிப்பதற்கும் கடல்சார் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் இலங்கையின் முப்படையினருக்கு இந்த பயிற்சி திட்டம் பயனுள்ளதாக அமைந்துள்ளதாக இலங்கை விமானப்படை தெரிவித்தது.

இந்த பயிற்சி தொடர்பில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

மனிதாபிமான உதவி, இடர் நிவாரணம் மற்றும் கடல்சார் பாதுகாப்பு ஆகியவற்றினூடாக ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான கூட்டுமுயற்சிக்கு அமெரிக்கா ஆதரவு வழங்குவதாகவும் பாதுகாப்பான இந்தோ - பசிபிக் பிராந்தியத்திற்காக முன்நிற்பதாகவும் அவர் பதிவிட்டுள்ளார். (அ)

# இலங்கைப் பணிப்பெண்ணிடம் பிள்ளையை ஒப்படைத்துவிட்டு தப்ப முயன்ற சீனப் பெண்

கொழும்பு, மார்ச் 14

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வருகைதரும் முனையத்தில், சீனப் பெண்ணொருவர் தன்னுடைய இளைய பெண் பிள்ளையை, இதுவரை காலமும் கவனித்துக்கொண்ட இலங்கை பெண்ணிடம் கொடுத்துவிட்டு, தப்பியோடுவதற்கு முயன்ற நிலையில், கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த சீனப் பெண், விமானத்தில் நுழைவதற்கு தயாராக இருந்த நிலையிலேயே கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கைது செய்யப்பட்டார் என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

35 வயதான சீனப் பெண், தன்னுடைய 58 வயதான தாயுடன், டுபாயில் வாடகை வீடொன்றில் வசித்து வந்துள்ளார். இந்த சீனப் பெண், பிரபலமான விடுதிகளில் நடனமாடும் நடனக் கலைஞர்.

அவருக்கு 3,6 வயதுகளில் இரண்டு பெண் பிள்ளைகள் உள்ளனர்.

தன்னுடைய சீனத் தாயை விட அதிகமாக நேசித்ததால் தன்னைப் பராமரிக்கும் இலங்கைப் பணிப்பெண்ணிடம், அவ்விரு பிள்ளைகளும் மிகுந்த பாசம் காட்டியுள்ளனர்.

இந்த பணிப்பெண், குருநாகல் பொல்கஹவெல பொத்துஹெரவில் வசிக்கும் 53 வயதுடையவர் ஆவார். அவர், சிங்கபூரில் பணிப்பெண் சேவையை முடித்துக்கொண்டு அண்மையில் இலங்கைக்கு திரும்பியுள்ளார்.

பணிப்பெண்ணின் பிரிவால் அவ்விரு பிள்ளைகளும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். எனினும், இது தொடர்பில் அக்கம் பக்கத்தினர் தெரிந்து கொள்ளாத வகையில் அந்த சீனப்பெண் நடந்துகொண்டுள்ளார்.

இதுதொடர்பில் எதனையும் கூறாத சீனப் பெண், இலங்கை பணிப்பெண்ணுக்கு அழைப்பை எடுத்து, தான் இலங்கைக்கு சுற்றுலா மேற்கொள்ள வருகைதர உள்ளதாகவும், தங்களை அழைத்துச் செல்ல கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு வருகை தருமாறும் அழைத்துள்ளார்.

அதனடிப்படையில் அவர்களை வரவேற்பதற்காக, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு பணிப்பெண் சென்றுள்ளார்.

சீனப்பெண், தன்னுடைய தாய் மற்றும் இரண்டு பிள்ளைகளை அழைத்துக்கொண்டு, டுபாயில் இருந்து வந்த டுபாய் விமானத்தின் ஊடாக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை திங்கட்கிழமை இரவு 10.30 மணியளவில் வந்தடைந்தனர்.

அங்கு அவர்கள் சந்தித்துக் கொண்டனர். சில மணிநேரம் அன்பை பகிர்ந்து கொண்ட சீனப்பெண், தன்னுடைய சிறிய குழந்தையை இலங்கை பணிப்பெண்ணிடம் ஒப்படைத்துவிட்டு தலைமறைவாகிவிட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய பொலிஸாரின் கவனத்துக்கு இலங்கை பெண் கொண்டுவந்தார்.

இலங்கை பணிப்பெண்ணும், சீன பிள்ளையும் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இந்நிலையில், டுபாய் நோக்கி பயணிப்பதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்த சீனப்பெண்ணும் அவருடைய தாயாரும் கைது செய்யப்பட்டனர்.

அவ்விருவரையும் நீர்கொழும்பு நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

# வடக்கு-கிழக்கு தழுவிய மக்கள் எழுச்சிப்போராட்டமே ஒரே வழி!

## வேலன் சுவாமிகள் அழைப்பு

வவுனியா, மார்ச் 14

“எமக்கான நீதியினை அடைவதற்கு வடக்கு கிழக்கு தழுவிய மக்கள் எழுச்சிப்போராட்டமே ஒரே வழி” என்று சிவகுரு ஆதீன முதல்வர் வேலன் சுவாமிகள் அறைகூவல் விடுத்துள்ளார்.

வெடுக்குநாறிமலை வழக்கை பார்வையிடுவதற்காக வவுனியா சென்றபோதே அவர் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

இதன்போது, இலங்கை பொலிஸாரின் அடாவடி அளவு கடந்து செல்வதாகவும், கைது செய்யப்படுவதற்கான எந்தவிதமான நியாயமான காரணங்களும் இல்லாமல் பொய்யான வகையில் தொல்பொருட் திணைக்களத்தால் நீதிமன்றிற்கு அறிக்கை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கைது செய்யப்படவர்கள் சீரான உணவின்றி வேதனைகளை அனுபவித்து வருவதாகவும், இந்த சூழ்நிலையில் நாம் ஒரு மக்கள் எழுச்சிப் போராட்டத்தினை வடக்கு கிழக்கு தழுவிய வகையிலே விரைவில் ஒன்றுதிரண்டு ஏற்படுத்துவதனூடகவே எமக்கான நீதியை நிலைநாட்ட முடியும் என்பது நிரூபிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே வடக்கு கிழக்கின் அனைத்து உறவுகள், பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள், பல்கலைக்கழக மாணவர்கள், பாதிக்கப்பட்ட தரப்புக்கள் என அனைவரும் ஒன்றுதிரண்டு பேரெழுச்சிப்போராட்டம் ஒன்று வவுனியா நகரில் விரைவில் நடாத்தப்படும் எனவும், அதற்கு அனைவரது ஆதரவினையும் வேண்டி நிற்பதாகவும் வேலன் சுவாமிகள் மேலும் கூறினார். (அ)

# அதிக வெப்பத்திலிருந்து மாணவர்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்குக!

## கல்வி அமைச்சு அறிவுறுத்தல்

கொழும்பு, மார்ச் 14

அதிக வெப்பத்திலிருந்து பாடசாலை மாணவர்களை பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பாடசாலை நிர்வாகத்திற்கு கல்வி அமைச்சு மீண்டும் அறிவுறுத்தியுள்ளது.

வெளிப்புற செயற்பாடுகளில் ஈடுபடுவதை திட்டமிடுவது தொடர்பில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை சில பாடசாலைகள் பின்பற்றவில்லை என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதிக வெப்பம் காரணமாக பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கடந்த மாதம் 26 ஆம் திகதி கல்வி அமைச்சு பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தியிருந்தது.

அந்த அறிக்கையின் மூலம் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை அவ்வாறே பின்பற்றுமாறு கல்வி அமைச்சு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

அதிக வெப்பம் நிலவும் நாட்களில் பாடசாலை மாணவர்கள் வெளிப்புற செயற்பாடுகளில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும் எனவும் விளையாட்டுக்களில் ஈடுபடும் மாணவர்கள் போதியளவு நீர் பருகுவதற்கான அல்லது சோர்வைப் போக்குவதற்கான வழிவகைகளை செய்வது பொருத்தமானது எனவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

வெப்பம் நிலவும் நாட்களில் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பயிற்சிகளைத் தவிர்க்குமாறு மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# இலங்கையை சேர்ந்த தம்பதி ஆஸியில் சடலங்களாக மீட்பு

மெல்பேர்ண், மார்ச் 14

அவுஸ்திரேலியாவில் வீடொன்றிலிருந்து வயதான இலங்கையை பூர்விகமாக கொண்ட தம்பதி சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர்கள் சுமார் 80 வயதுடைய டோய்ன் காஸ்பர்ஸ் மற்றும் மர்லீன் காஸ்பர்ஸ் என விக்டோரியா பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவின் மெல்பேர்னில் உள்ள வீடொன்றில் இருந்து இருவரும் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் மரணத்திற்கான காரணம் தெரியவராத நிலையில் அந்நாட்டு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# போஷாக்கு தொடர்பான உலகளாவிய அறிக்கையை நிராகரித்தது இலங்கை

## முரண்பாடு காணப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 14

**இலங்கைச் சிறுமிகள் போஷாக்கின்மையால் பாதிக்கப்படுவதாக பிரித்தானிய மருத்துவ சஞ்சிகையான த லான்செற் (The Lancet) வெளியிட்ட ஆய்வு அறிக்கையினை இலங்கை நிராகரித்துள்ளது.**

குறித்த ஆய்வின்படி, இலங்கையில் சுமார் 410,000 சிறுமிகள் எடை குறைந்தவர்களாக அடையாளப்படுத் தப்பட்டிருந்தனர்.

1990 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலான தரவுகளை உள்ளடக்கி இந்த அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

ஊட்டச்சத்து மற்றும் சுகாதார அணுக்களை மேம்படுத்துவதனை நோக்கமாகக் கொண்ட செயற்றிட்டங்கள் காணப்படுகின்ற போதிலும், 1990 ஆம் ஆண்டு முதல் இந்த துரதிர்ஷ்டவசமான நிலை காணப்படுவதாக ஆய்வறிக்கையின் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

அத்துடன், 2022 ஆம் ஆண்டில் சுமார் 880 மில்லியன் வயது வந்தவர்கள் மற்றும் 159 மில்லியன் சிறுவர்கள் உடல் பருமனுடன் காணப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த மூன்று தசாப்தங்களாக இந்த நிலைமையானது நிலையாக காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இலங்கை தொடர்பில் உலகளாவிய அறிக்கையின் முடிவுகளை இலங்கை சுகாதார துறைசார் அதிகாரிகள் கடுமையாக நிராகரித்துள்ளனர்.

ஆய்வில் வரையறுக்கப்பட்டுள்ள தரவுகள் இலங்கையின் உண்மையான சூழ்நிலையுடன் முரண்படுவதாக சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் அண்மைய அறிக்கையின்படி, இலங்கை 2023 ஆம் ஆண்டில் 15,763 சிறுவர்கள் ஜ1.2மூஸ கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாட்டை எதிர்கொண்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில் குறித்த எண்ணிக்கை 18,420 ஜ1.4மூஸ ஆக பதிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கல்விக் கொள்கையில் மிகவிரைவில் மாற்றம்

## கல்வி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 14

தேசிய கல்விக் கொள்கையொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில் தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாண சபை பாடசாலைகள் எதுவாக இருந்தாலும் ஒரே மாதிரியான பாடசாலைகளை செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசியப் பாடசாலைகள் மற்றும் மாகாணப் பாடசாலைகளை ஒரு வகையாகப் பிரிக்கக் கூடாது என்று கல்விச் சீர்திருத்தக் கொள்கைக் கட்டமைப்பில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

கண்காணிப்புக் குழுவில் விவாதிக்கப்பட்டு வருகிறது. ஒரேயடியாக சாத்தியமில்லை. ஆனால் படிப்படியாக அதை செய்ய முடியும்.

ஆசிரியர்களின் அறிவு, தொழில்நுட்ப பயன்பாடு போன்றவற்றை மேம்படுத்தும் திட்டங்கள் அனைத்தும் கல்வி சீர்திருத்தங்களுடன் வருகின்றன.

வகுப்பறையில், ஒரு பாடத்தின் அலகு முடிந்ததும், ஒரு பயிற்சி செய்யப்படுகிறது. அது குறிக்கப்பட்டு முடிக்கப்படும். பிறகு அடுத்தது. பல நாடுகள் இப்படித்தான் இயங்குகின்றன.

கல்விக்கென ஒரு கொள்கை உள்ளது. அது காலப்போக்கில் மாற வேண்டும். அந்த வித்தியாசத்தை நாங்கள் ஏற்படுத்துகிறோம். இது பாராளுமன்றத்தின் ஒப்புதலுடன் செய்யப்படுகிறது. அப்போது அமைச்சர் மாறினாலும் கொள்கை மாறாது-என்றார். (அ)

# இணையத்தளங்கள் ஊடாக அதிகரிக்கும் குற்றச்செயல்கள்

கொழும்பு, மார்ச் 14

இணையத்தளம் ஊடாக இடம்பெறும் குற்றச் செயல்கள் தற்போது அதிகரித்து வருவதாக இலங்கை கணினி அவசர செயல்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதி வரை 423 கணினி மோசடிகள் பதிவாகியுள்ளதாக அதன் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனுகோல தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இணையத்தளம் மூலம் ஒன்லைன் வேலைகளை வழங்குவதாகக் கூறி மோசடிகள் அதிகரித்துள்ளன. அதே போல் கடந்த ஆண்டு முதல் இந்த ஆண்டின் கடந்த இரண்டு மாதங்களில் கிரிப்டோ-கரன்சி மோசடிகள் மற்றும் பிரமிட் மோசடிகள் அதிகரித்துள்ளன. 2023 இல் 1,609 இணைய மோசடிகள் பதிவாகியுள்ளன. இந்த ஆண்டில் , ஜனவரி மாதத்தில் மாத்திரம் இதுபோன்ற 110 மோசடிகள் பதிவாகியுள்ளன. பெப்ரவரியில் 213 இணைய மோசடிகள் பதிவாகியுள்ளன, மார்ச் மாதத்தில் இதுவரை 100 மோசடிகள் பதிவாகியுள்ளன. சில பண மோசடி முறைப்பாடுகள் கிடைத்தவுடன் அவர்களுக்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை அளித்து, கணினி குற்றப்பிரிவுக்கு அனுப்பி வைத்துள்ளோம்.இணையத்தில் நிகழும் கணினி குற்றங்கள் குறித்து மேலும் கருத்து தெரிவித்த அவர், இணையத்தளம் ஊடாக நிர்வாண புகைப்படங்கள் வெளியிடப்படும் என விடுக்கப்பட்டுள்ள மிரட்டல் தொடர்பிலும் தகவல்கள் கிடைத்துள்ளன. 2023ல் இதுபோன்ற 775 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அத்தோடு 1609 இணையதள மோசடி சம்பவங்கள் பதிவாகியுள்ளன. சமூக வலைதளங்களில் போலி கணக்குகள் தொடர்பில் 5,188 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. குழந்தைகள் சம்பந்தப்பட்ட 98 சம்பவங்களும் பதிவாகியுள்ளன. அதே நேரத்தில், தனிநபர்கள் கணக்குகளுக்குள் ஊடுருவியமை தொடர்பில் 7,499 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. ஊடுருவியமை மற்றும் போலி கணக்குகளின் முறைப்பாடுகளே அதிகரித்துள்ளன- என்றார். (அ)

# ரணிலை வேட்பாளர் எனக்கூறும் அளவுக்கு பொதுஜன பெரமுன பலவீனமடையவில்லை

## திஸ்ஸ குட்டியராச்சி கூறுகிறார்



கொழும்பு, மார்ச் 14

ஐக்கிய தேசியக்கட்சி பல வருடங்களாக முயற்சித்தும் ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதி பதவிக்கு கொண்டு வர முடியாமல் போனது எனவும் எனினும் பொதுஜன பெரமுன அவரை ஜனாதிபதிக்கு தெரிவு செய்தது என்றும் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,பொதுஜன பெரமுனவின் வாக்குகளினாலேயே அந்த பதவியில் இருக்கின்றார்.

எனினும் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க என்று கூறும் அளவுக்கு கட்சி பலவீனமடையவில்லை.

ஆனால் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க அல்ல என்று கூறவும் அளவுக்கும் கட்சி அவசரப்படாது.

40 லட்சம் வாக்கு வங்கியை கொண்டுள்ள பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக ரணில் நிறுத்தப்பட வேண்டுமாயின் அவர் மேலும் 15 லட்சம் வாக்குகளை கொண்டு சேர்க்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதனை விடுத்து தோல்வியடையும் வேட்பாளரை நிறுத்தி தோல்வியை ஏற்றுக்கொள்ள பொதுஜன பெரமுன தயாரில்லை -என்றார். (அ)

# கோட்டாபய நாட்டை விட்டு வெளியேற வசதி செய்த தேரர்

கொழும்பு, மார்ச் 14

அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறுவதற்கு தான் வசதிகளைச் செய்து கொடுத்ததாக ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் தேவையான வசதிகளை அவருக்கு தான் ஏற்படுத்திக் கொடுத்ததனை கோட்டாபய நன்கு அறிவார்.

நாங்கள் கோட்டாபயவுக்கு எதிரானவர்கள் அல்லர். தற்போதுள்ள முறைமைக்கு எதிரானவர்கள்.

கோட்டாபயவை நாட்டை விட்டு வெளியேற்றும் சதி என்ன என்பதை தற்போதைய தலைவரால் ஒரு வார்த்தையில் சொல்ல முடியும்-என்றார். (அ)

# இறுதிக் கிரியைகளுக்கு தயாரான சடலத்தை பிரேத பரிசோதனைக்கு ஒப்படைக்க உத்தரவு!

கொழும்பு, மார்ச் 14

பொரளையில் உள்ள பிரபல மலர்சாலையில் இறுதி கிரியைகளுக்கு தயாராக வைக்கப்பட்டிருந்த சடலமொன்றை, பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்குமாறு கோட்டை நீதவான் திலின கமகே உயிரிழந்தவரின் உறவினர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

கொள்ளுப்பிட்டி பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை கருத்திற்கொண்டு நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

தமது கணவர் மூன்று மாதங்களாக வீட்டை விட்டு வெளியேறி கொள்ளுப்பிட்டி பகுதியில் உள்ள தமது சகோதரியின் வீட்டில் தங்கியிருந்ததாகவும், இந்த மரணத்தில் சந்தேகம் இருப்பதாகவும் உயிரிழந்தவரின் மனைவி கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் இந்த சமர்ப்பணங்களை முன்வைத்துள்ளனர்.

இதன்படி சடலத்தை மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் பிரேத அறையில் வைக் குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகத்துக்குரிய மரணம் என்ற முறைப்பாட்டின் அடிப்படையில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினரும் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் நீதிமன்றில் அறிவித்துள்ளனர்.

உயிரிழந்த 64 வயதுடைய நபர் நீண்டகால சிறுநீரகம் மற்றும் இதய நோய்களுக்கு சிகிச்சை பெற்று வந்தவரெனவும், உயிரிழந்தவரின் சகோதரியின் வேண்டுகோளுக்கு இணங்க சடலம் அடங்கிய பெட்டி முத்திரையிட்டு மூடப்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (அ)

# பஸிலுடன் மொட்டு கட்சியின் உறுப்பினர்கள் அவசர சந்திப்பு

கொழும்பு, மார்ச் 14

பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு தொடர்பில் கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்சவுடன் கட்சி உறுப்பினர்கள் பேச்சு நடத்த உள்ளனர்.

எதிர்வரும் இரண்டு வார காலத்திற்குள் கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் கூட்டப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் கட்சியின் தீர்மானங்கள் குறித்து இந்த கூட்டத்தில் விசேட கவனம் செலுத்தப்பட உள்ளது.

இதேவேளை, பஸில் ராஜபக்ச கட்சியின் உறுப்பினர்களை தற்பொழுது சந்தித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கட்சியின் அரசியல் நடவடிக்கைகள் குறித்தும் மாவட்ட ரீதியில் கட்சியின் உறுப்பினர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பிலும் இந்த சந்திப்புக்களில் விசேட கவனம் செலுத்தப்பட உள்ளது. (அ)

# பொத்துவில் விடுதி ஒன்றில் இரண்டு சடலங்கள் மீட்பு!

அம்பாறை, மார்ச் 14

**பொத்துவில் - அறுகம்பே பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் பெண் ஒருவரை கொலை செய்துவிட்டு ஆண் ஒருவர் தமது உயிரையும் மாய்த்து கொண்டுள்ளார்.**

குறித்த தம்பதியினர் சில தினங்களுக்கு முன்னர் அந்த விடுதிக்கு சென்று தங்கியுள்ளனர்.

இந்த நிலையில் அவர்கள் தங்கியிருந்த அறையின் கதவு திறக்கப்படாமல் உள்ளமையினால் சந்தேகமடைந்த விடுதியின் முகாமையாளர் உள்ளிட்ட தரப்பினர் அதனை உடைத்துள்ளனர்.

பின்னர் இது தொடர்பில் காவல்துறையினரிடமும் அறியப்படுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் 35 வயதான பெண் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் 51 வயதுடைய ஆண் ஒருவரே இவ்வாறு தமது உயிரை மாய்த்து கொண்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## அம்பாறை பள்ளிவாசல்களுக்கு பேரீச்சம் பழங்கள் கையளிப்பு

அம்பாறை, மார்ச் 14

அம்பாறை மாவட்டத்திற் குட்பட்ட பதிவு செய்யப்பட்ட பள்ளிவாசல்களுக்கு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பேரீச்சம் பழங்களைக் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் ஏ.எம்.பர்ஹானின் ஒருங்கிணைப்பின் கீழ், அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஏ.சுபைதீனின் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், பிரதம அதிதியாக சாய்ந்தமருது -மாளிகைக்காடு ஜும்ஆப் பள்ளிவாசல் செயலாளர் ஏ.எல்.எம். மன்சூர் கலந்து கொண்டார்.

மேலும் இந் நிகழ்வில் சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் நிர்வாக உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.றசீது மற்றும் ஏனைய பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்கள், பள்ளிவாசல் தலைவர்கள், செயலாளர்கள், நிர்வாக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். (அ)

## இந்து சமுத்திர வலய நாடுகள் அமைப்பின் போட்டியில் கிழக்கு மாணவி 2ஆம் இடம்!



அம்பாறை, மார்ச் 14

இந்துசமுத்திர வலய நாடுகள் கூட்டமைப்பு இந்துசமுத்திரத்தை எல்லையாகக் கொண்டுள்ள 23உறுப்பு நாடுகளையும் 12 பேச்சுவார்த்தை பங்குதாரர்களையும் கொண்ட ஒரு நிறுவனமாகும்.

கடந்த வருடம் இந்துசமுத்திர வலய நாடுகள் கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பினை இலங்கை ஏற்றுக்கொண்டது. இலங்கையின் தலைமைத்துவத்தின் கீழ், இந்து சமுத்திர வலய நாடுகள் அமைப்பு கல்வி அமைச்சுடன் இணைந்து "எதிர்கால சந்ததியினருக்கான நிலைபேறான இந்து சமுத்திரம்" எனும் தொனிப் பொருளின் கீழ் முதலாவதாக இடம்பெற்ற இந்து சமுத்திர வலய நாடுகள் தினம் கடந்த ஞாயிற்றுக்கிழமை, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு ஒருங்கிணைப்பில் கௌரவ. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பு, காலி முகத்திடலில் இடம் பெற்றது.

"எதிர்கால சந்ததியினருக்கான இந்து சமுத்திரம்" எனும் தலைப்பின் கீழ் நடாத்தப்பட்ட சித்திரப் போட்டியில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை)யில் தரம் 12 உயர்தர கலைப் பிரிவில் கல்வி கற்கும் மாணவி ஹபுல் ஹஸ்ஸன் பாத்திமா ஹஸ்னா என்பவர் கிழக்கு மாகாண மட்டத்தில் சிரேஷ்ட பிரிவில் 02ஆம் நிலையினைப் பெற்று தெரிவு செய்யப்பட்டுள்ளார். (அ)

# களுவாஞ்சிக்குடியில் பாரம்பரிய மூலிகை சித்த வைத்திய முகாம்



காரைதீவு, மார்ச் 14

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்தின் மகளிர் தினத்தையொட்டிய தான நிகழ்வுகளின் வரிசையில் பாரம்பரிய மூலிகை சித்த வைத்திய முகாம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்தினால் மகளிர் தினத்தினை முன்னிட்டு பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னத்தின் வழிகாட்டுதலின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுகளின் வரிசையில் நான்காவது நிகழ்வாக மகளிருக்கான பாரம்பரிய மூலிகை சித்த வைத்திய முகாமானது பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் சோதிடரும், பாரம்பரிய சித்த வைத்தியருமான கணபதிப்பிள்ளை விஸ்வலிங்கம் கலந்து கொண்டு பாரம்பரிய மூலிகை மற்றும் சித்த வைத்தியம் தொடர்பான அறிவூட்டலினையும், சித்த வைத்திய ஆலோசனையினையும் வழங்கியிருந்தார்.

இரு கட்டங்களாக இடம் பெற்ற இந்த வைத்திய முகாமில் காலையில் இடம்பெற்ற நிகழ்வில் அலுவலக உத்தியோகத்தர்களும், பிற்பகல் இடம் பெற்ற நிகழ்வில் சமுர்த்தி சமுதாய அடிப்படை சங்கங்களின் உறுப்பினர்களுமாக நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டு பயனடைந்திருந்தனர்.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் உட்பட பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டிருந்ததுடன், இந்த வைத்திய முகாம் மூலம் தாம் நல்ல ஆலோசனைகளையும் பெற்றுக் கொண்டதாக பயனாளிகள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஊழியர்களின் திடீர் வேலை நிறுத்த போராட்டம் காரணமாக தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் நடவடிக்கை ஸ்தம்பிதம்!

அம்பாறை, மார்ச் 14

பல்கலைக்கழக தொழிற்சங்கங்கள், நிருவாக உத்தியோகத்தர்கள் சங்கங்கள், கல்விசார் ஆதரவு சங்கங்கள் மற்றும் அரசியல் சங்கங்களின் கூட்டுக் குழுவின் ஏகமனதான தீர்மானத்தின் அடிப்படையில், நேற்று நண்பகல் 12.00 மணியிலிருந்து இன்று புதன்கிழமை வரை தொடர்ச்சியான ஒன்றரை நாட்கள் அடையாள வேலை நிறுத்தம் ஒன் று நாட்டில் உள்ள சகல பல்கலைக்கழகங்களிலும் மேற்கொள்ளப்படுகின்றது.



குறித்த திடீர் வேலைநிறுத்த போராட்டம் தென்கிழக்கு பல்கலைக்கழகத்திலும் கல்விசார ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் எம்.ரி.எம். தாஜூடீன் தலைமையில் இடம்பெறுகின்றது.

நாட்டின் கடுமையான பொருளாதார நெருக்கடியால் சடுதியாக அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவினை ஈடுசெய்ய முடியாத நிலையில் எமது நீண்டகால சம்பள முரண்பாடுகளை சீர்செய்ய விடுக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்ந்தும் உதாசீனம் செய்யப்படுவதை வெளிக்கொணரும் முகமாகவும் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலுமுள்ள கல்விசாரா ஊழியர்கள் மேற்குறித்த இந்த ஒன்றரை நாட்கள் அடையாள பணிப்பகிஸ்கரிப்பை மேற்கொள்கின்றனர்.

மேற்குறித்த அடையாள வேலை நிறுத்தத்தில் அனைத்து விதமான சேவை வழங்கும் உத்தியோகத்தர்களும் தங்களது கடமைகளில் இருந்து விலகியிருக்குமாறும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் கடமை மட்டுப்படுத்தப் பட்டுள்ளதுடன் அவசியமான அல்லது அவசியம் என கருதும் இடங்களில் மாத்திரம் தங்களது சேவையை வழங்க முடியும் என்பதுடன் குறித்த கடமையின் நிமித்தம் சீருடைகளை அணியாது சாதாரண உடையில் கடமையாற்ற உள்ளதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.



## சாய்ந்தமருதில் நிதாஉல் பீர் சமூகசேவை அமைப்பினால் உலர் உணவுப் பொதிகள்

அம்பாறை, மார்ச் 14

கல்முனை நிதாஉல் பீர் சமூக சேவை அமைப்பினால் புனித ரமழானை முன்னிட்டு தேவையுடைய மக்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கிவைக்கும் நிகழ்வு நேற்று முன் தினம் அந்த அமைப்பின் ஸ்தாபகர் அல் ஹாஜ் இசட்.எம். அமீன் இல்லத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை சாய்ந்தமருது மற்றும் காரைதீவு ஆகிய பிரதேச செயலகங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சுமார் 1000 பயனாளிகளுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இப்பொதியில் அரசி, சீனி, பருப்பு, ,தேயிலைத்தூள், வெங்காயம், கிழங்கு, கரட் உட்பட மேலும் சில மரக்கறி வகைகளும் அடங்கியிருந்தன.

இந்நிகழ்வுக்கு விஷேட பேச்சாளராக மருதமுனை தாருல் ஹூதா பெண்கள் கல்லூரியின் விரிவுரையாளர் அஷ்ஷேய்க் எம்.ஐ.எம். ஜிபான் (மதனி) கலந்து கொண்டார். (அ)

# புகலிட கோரிக்கையாளர் எண்ணிக்கை கட்டுக்குள்!

## பிரிட்டன் தீவிர நடவடிக்கை

லண்டன், மார்ச் 14

நாட்டுக்கு வருகை தரும் புகலிடக்கோரிக்கையாளர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த பிரித்தானிய அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் இதுவரை காலமும் சட்டவிரோதமாக நாட்டுக்குள் வருகை தரும் புகலிடக்கோரிக்கையாளர்களின் எண்ணிக்கையை குறைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த பிரித்தானிய அரசு தற்போது சட்டப்படி புலம்பெயர்வோரின் எண்ணிக்கையையும் கட்டுப்படுத்தும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அதன்படி, புலம்பெயர்தலுக்கான புதிய கடப்பாடுகளை பிரித்தானிய அரசு அறிமுகப்படுத்தியுள்ளதோகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக நேற்றுமுதல் முதியவர்கள், நோயாளிகளை கவனித்துக்கொள்ளும் பணிகளுக்கு வரும் வெளிநாட்டவர்களின் குடும்பத்தினரை, பிரித்தானியாவுக்கு அழைத்துவருவதற்கான தடை நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், எதிர்வரும் மாதம் 4 ஆம் திகதி முதல் திறன்மிகு பணியாளர்கள் விசாவில் வருபவர்களுக்கான குறைந்தபட்ச வருமான வரம்பு, 26,200 பவுண்டுகளில் இருந்து 38,700 பவுண்டுகளாக உயர்த்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி முதல், குடும்ப விசா பெறுவதற்கான குறைந்தப்பட்ச வருமான வரம்பு 29,000 பவுண்டுகளாக உயர்த்தப்படவுள்ளதாகவும் அது தொடர்ந்தும் 38,700 பவுண்டுகள் வரை அதிகரிக்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# கனடாவில் பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கு தட்டுப்பாடு!



மொன்றியல், மார்ச் 14

கனடாவில் பாடசாலை ஆசிரியர்களுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி கியூபெக் மாகாணத்தில் மாத்திரம் இவ்வாண்டில் சுமார் 8,500 ஆசிரியர் பதவிக்கான வெற்றிடங்கள் காணப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது.

ஆசிரியர் பதவி வகிப்பதற்கான தகமையுடைய தொழில் சார் கற்கை நெறிகளை பூர்த்தி செய்த பலர் ஆசிரியராக கடமையாற்ற விரும்பாதமையே இதற்கான காரணம் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இந்நிலையில், ஆசிரியர் பதவி வெற்றிடங்களை சமாளிக்கும் வகையில், பாடசாலை நிர்வாகங்கள் பூரண தகுதியற்றவர்களை ஆசிரியர் கடமையில் அமர்த்தியுள்ளதாகவும், இதனால் தகுதியற்றவர்கள் ஆசிரியர்களாக கடமையாற்றி வருவதாகக் குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை கியூபெக் மாகாணத்தில், கடந்த 2020 மற்றும் 2021ஆம் ஆண்டில் ஆசிரியர்களாக பணியாற்றிய மூன்று இலட்சம் பேருக்கு ஆசிரியர் பதவிக்கான தகமை கிடையாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆசிரியப் பணியில் ஈடுபடுவோருக்கு உரிய அங்கீகாரம் வழங்கப்படாமையே அநேகமானவர்கள் ஆசிரிய தொழிலை விரும்பாதமைக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# காஸாவுக்கு உதவிக்கரம் நீட்டியுள்ளது சைபிரஸ்!




நிகோசியா, மார்ச் 14

சைப்பிரஸில் இருந்து உதவி பொருட்கள் அடங்கிய கப்பல் ஒன்று நேற்று காஸா நோக்கிப் பயணித்துள்ளது.

பைலட் திட்டத்தின் அடிப்படையில் ஸ்பெய்ன் நாட்டின் தொண்டு நிறுவனமொன்றுக்கு சொந்தமான கப்பல் நேற்று சைப்பிரஸ் துறைமுகத்தில் இருந்து பயணத்தை ஆரம்பித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

சுமார் 200 தொன் நிறையுடைய உதவிப்பொருட்கள் கப்பலில் கொண்டு செல்லப்படுவதாகவும் தெரியவந்துள்ளது.

அத்துடன் சைப்பிரஸில் மேலும் 500 தொன் உதவிப் பொருட்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அணுவாயுத போருக்கு ரஷ்யா தயார்நிலையில்!

## மேற்குலத்துக்கும் அமெரிக்காவுக்கும் விளாடிமிர் புடின் கடும் எச்சரிக்கை

மொஸ்கோ, மார்ச் 14

“ரஷ்யா அணுசக்தி யுத்தத்திற்கு தொழில்நுட்ப ரீதியாக தயாராக உள்ளது. உக்ரைனுக்கு அமெரிக்கா துருப்புக்களை அனுப்பினால் அது போரின் குறிப்பிடத்தக்க விரிவாக்கமாக கருதப்படும்.”

- இவ்வாறு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மேற்குலக நாடுகளுக்கும் அமெரிக்காவுக்கும் கடுமையான எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

மொஸ்கோவில் தொலைக்காட்சியொன்றுக்கு நேர்காணல் வழங்கிய புடின்,

“தனக்கு இன்னும் ஆறு ஆண்டுகள் அதிகாரம் கிடைக்கும் என்பது உறுதியானது. உக்ரேனில் அணு ஆயுதங்களைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.



ஆனால், இராணுவ - தொழில்நுட்பக் கண்ணோட்டத்தில், நாங்கள் நிச்சயமாக தயாராக இருக்கிறோம்.”என்றார்

ரஷ்யா அணு ஆயுதப் போருக்குத் தயாராக உள்ளதா? என்ற கேள்விக்கு பதிலளித்த புடின்,

”ரஷ்ய எல்லையில் அல்லது உக்ரைனில் அமெரிக்கா தமது துருப்புக்களை நிலைநிறுத்தினால் ரஷ்யா இந்த நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதை அமெரிக்கா புரிந்துகொண்டுள்ளது.

எனவே, அணுசக்தி மோதல் விரைந்து வருவதாக நான் நினைக்கவில்லை. ஆனால், நாங்கள் இதற்கு தயாராக இருக்கிறோம்.” என்றார்.

“உக்ரைன் விவகாரத்தில் தீவிர பேச்சுவார்த்தைகளுக்கு ரஷ்யா தயாராக உள்ளது. ஆனால், அவை யதார்த்தத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும்.” என்றும் புடின் கூறியுள்ளார். (அ)

# ஸ்லோவாகியாவில் மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்!

## உக்ரைனுக்கு ஆதரவாக கோசங்கள்

கீவ், மார்ச் 14

உக்ரெய்ன் மக்களுக்கு ஆதரவு தெரிவித்து ஸ்லோவாகியாவில் ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

மேலும் அரசாங்கம், ரஷ்யாவுடன் காட்டிவரும் நெருக்கத்திற்கு எதிராகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோசங்களை எழுப்பியிருந்தனர்.

பிரதமர் றொபேர்ட் பிகோ ஆட்சிக்கு வந்ததிலிருந்து ஐரோப்பிய நாடுகள் உக்ரையினுக்கு இராணுவ உதவிகளை வழங்குவது குறித்து விமர்சித்துவருகின்றார்.இந்த நிலையில் மக்கள் அரசாங்கத்தின் கொள்கைக்கு எதிராக தமது விமர்சனங்களை வெளியிட்டுள்ளனர்.



இதேவேளை ஆர்ப்பாட்டத்தில் வன்முறைச் சம்பவங்கள் ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் பாதுகாப்பு தரப்பினர் குவிக்கப்பட்டிருந்தனர். (அ)

# மே மாத நடுப்பகுதியில் பாராளுமன்றம் கலைப்பு

## கூறுகின்றார் ஜி.எல்.பீரிஸ்

கொழும்பு, மார்ச் 14

**ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்த வேண்டுமெனில் தற்போதைய பாராளுமன்றம் மே 13 ஆம் திகதி ஆரம்பமாகும் வாரத்தில் கலைக்கப்பட வேண்டும் என்று சட்டத்துறை பேராசிரியரான பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**



அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஜூலை 15 ஆம் திகதி தீர்க்கமான நாளாகும். ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்பை தேர்தல் ஆணைக்குழு விடுக்கும் காலப்பகுதியாகும். அக்காலப்பகுதியில் அதற்கான அறிவிப்பை ஆணைக்குழுவினர் விடுத்தாக வேண்டும்.

எனினும், தற்போது பாராளுமன்ற தேர்தல் பற்றியும் பேசப்படுகின்றது. ஜூலை 15 ஆம் திகதிக்கு முன்னர் பாராளுமன்ற தேர்தலை நடத்த வேண்டுமெனில் மே 13 ஆம் திகதி ஆரம்பமாகும் வாரத்தில் பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டும். இவ்வாறு மே நடுப்பகுதியில் பாராளுமன்றம் கலைக்கப்படாவிட்டால் ஜூலை மாத நடுப்பகுதிக்கு முன்னர் பாராளுமன்ற தேர்தலை நடத்த முடியாத சூழ்நிலை ஏற்படும்.

அதேவேளை, எந்தவொரு காரணத்துக்காகவும் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்பை தேர்தல் ஆணைக்குழு ஒத்திவைக்க முடியாது. பாராளுமன்ற தேர்தலுக்கான ஏற்பாடு இடம்பெறுகின்றது எனக்கூறியும் அதனை செய்ய முடியாது. ஜூலை நடுப்பகுதியில் கட்டாயம் அறிவிப்பை விடுத்தாக வேண்டும்.

அடுத்தது ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு நிதி இல்லை எனவும் கூறமுடியாது. உள்ளாட்சிச்சபைத் தேர்தலின்போது கையாண்ட இந்த விளையாட்டு ஜனாதிபதி தேர்தலின்போது எடுபடாது. ஏனெனில் பாதீட்டில் 10 பில்லியன் ரூபா ஜனாதிபதி தேர்தலுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தல் நடத்தப்பட்டால்கூட ஜனாதிபதி தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை அதற்காக பயன்படுத்த முடியாது. அவ்வாறு பயன்படுத்திவிட்டு, ஜனாதிபதி தேர்தலை நடத்த நிதி இல்லை என கூறமுடியாது -என்றார். (அ)

# முட்டைக்கு கட்டுப்பாட்டு விலை!

கொழும்பு, மார்ச் 14

எதிர்வரும் பண்டிகை காலத்தில் முட்டையின் விலையை குறைக்கும் வகையில் கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

முட்டை உற்பத்தியாளர்களுக்கும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று முன் தினம் பிற்பகல் விவசாய அமைச்சில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஹேமமாலி கொத்தலாவல, இந்தத் தீர்மானத்தை அறிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த கலந்துரையாடலை அடுத்து ஊடகங்களுக்கு கருத்துரைத்த அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் சரத் ரத்னாயக்க, தற்போது சந்தையில் 50 ரூபாவை விடவும் குறைந்த விலையில் முட்டைகள் விற்பனை செய்யப்படுவதில்லை என தெரிவித்தார்.

பொருளாதார மத்திய நிலையங்களில் குறித்த விலைக்கு குறைவாக முட்டைகள் விற்பனை செய்யப்படுகின்ற போதிலும் அந்த விலையில் சாதாரண மக்களுக்கு முட்டைகள் கிடைப்பதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# நாட்டில் நீர்ப் பாவனை 15 வீதத்தால் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 14

நிலவும் வறட்சி காரணமாக நீர் பாவனை 15 வீதத்தால் அதிகரித்துள்ளது.

இதன்காரணமாக மேட்டு நிலப் பகுதிகள் மற்றும் நீர் விநியோகக் கட்டமைப்பின் முடிவிடங்களில் வாழும் மக்களுக்கு குறைந்த அழுத்தத்தில் நீர் விநியோகிக்கப்படுவதாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், இதுவரை எந்தவொரு பகுதிக்கும் நீர் விநியோகம் நிறுத்தப்படவில்லை என சபை குறிப்பிட்டுள்ளது.

இதனால் நீரை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை மக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

தற்போது நிலவும் வறட்சி, அடுத்த மாதம் வரை நீடிக்குமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. (அ)

# ஏப்ரல் நடுப்பகுதி வரை கடும் வெப்பம் தொடரும்

கொழும்பு, மார்ச் 14

வெப்பமான காலநிலை எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடுப்பகுதி வரை தொடரக் கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

மேல், சபரகமுவ, வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும் வவுனியா, மன்னார், அநுராதபுரம், மொனராகலை மாவட்டங்களிலும் எச்சரிக்கை மட்டத்தை விடவும் அதிக வெப்பமான வானிலை நிலவக் கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதிக்கு பின்னர் ஓரளவு மழைவீழ்ச்சி பதிவாகக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

எவ்வாறாயினும் போதியளவு மழைவீழ்ச்சி பதிவாகாது என தெரிவிக்கப்படுகிறது.

மே மாதத்தின் பின்னரே போதியளவு மழையுடனான வானிலை ஆரம்பிக்கக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (அ)

# கடல் சாரணர்கள் தொண்டர் அமைப்பை உருவாக்குவதற்கு அமைச்சரவை பத்திரம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

வடக்கின் கடல் பாதுகாப்பை கண்காணிப்பதற்காக கடல் சாரணர்கள் என்ற தொண்டர் அமைப்பை உருவாக்குவதற்கான அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.



வடபகுதி கடற்பரப்பில் இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் கடற்படையினர் முடியுமானவரை தங்களது கடமைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எனினும், இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் கடற்பரப்பின் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள மற்றுமொரு முயற்சியாக குறித்த யோசனையை தாம் அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

குறித்த படையின் ஊடாக இந்திய மீனவர்களின் செயற்பாடுகளை கண்காணித்து கடற்படையினரது உதவியுடன் கட்டுப்படுத்த முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# தெற்காசியாவுக்கான நுழைவாயிலாக கொழும்புத் துறைமுக நகரம் மாறும்!

## பிரதமர் தினேஷ் நம்பிக்கை

கொழும்பு, மார்ச் 14

கொழும்பு துறைமுக நகர வர்த்தக மையமானது நாட்டில் ஒரு செழிப்பான வர்த்தக மையமாக மாறும் என்பதில் முழுமையான நம்பிக்கை கொண்டுள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

கொழும்பு துறைமுக நகர வர்த்தக மையத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்-

அண்மைக் காலத்தில் நாட்டில் மிகவும் எதிர்பார்ப்பு நிறைந்த அபிவிருத்தித் திட்டத்தின் வருகையை குறிக்கும் மிக முக்கியமான நிகழ்வாக இது கருதப்படுகின்றது.



ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வர்த்தகம் மற்றும் முதலீட்டுக்கான வரலாற்று மையமாக இலங்கை விளங்கி வருகின்றது.

கொழும்பு துறைமுக நகரம் நாட்டின் பொருளாதார மற்றும் சமூக நிலப்பரப்பை மீள்வரையறை செய்வதை நோக்கமாகக் கொண்ட பல பில்லியன் டொலர் பெறுமதிவாய்ந்த தொலைநோக்கு திட்டமாகும். வர்த்தகத் துறைகளுக்கு புத்தாக்கங்களை உருவாக்குவ தற்கான சிறந்த சூழலையும் நாங்கள் வழங்குகிறோம். பிராந்தியத்தில் ஒரு முக்கிய பொருளாதார மைய மாக இது மாற உள்ளது.

கொழும்பு துறைமுக நகரம் நிச்சயமாக அந்த செயன்முறையை துரிதப்படுத்தும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். 'தெற்காசியாவுக்கான நுழைவாயில்' மற்றும் கிழக்கு மற்றும் மேற்குக்கான மத்திய மையமாக திகழும் என்பதில் ஐயமில்லை- என்றார். (அ)

# வீட்டுத் தோட்ட செய்கையாளருக்கு இரண்டு இலட்சம் ரூபாய் நிதி உதவி

கொழும்பு, மார்ச் 14

பத்து பேர்ச் காணிக்கு அதிகமான வீட்டுத் தோட்டங்களுக்கு 2 இலட்சம் ரூபாய் நிதியுதவியை பெற்று கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாய இராஜாங்க அமைச்சர் மொஹான் பிரியதர்ஷன டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர ஆகியோரின் ஆலோசனைக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது பெரும்போகத்தில் 3.6 மெற்றிக் தொன் விளைச்சலைப் பெற்றுகொள்ள முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டின் வருடாந்த அரிசித் தேவை 2.4 மில்லியன் மெற்றிக் தொன்களாகும்.

சில மாகாணங்களில் சிறந்த அறுவடை கிடைப்பதுடன், இந்த விளைச்சலுக்காக விவசாயிகளுக்கு தொழில்நுட்ப வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் நாட்களில் வறட்சி ஏற்படக்கூடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

அதனால் நீரை முடிந்த வரையில் சிக்கனமாக பயன்படுத்த வேண்டியுள்ளது.

சிறுபோகத்தில் 5 இலட்சத்து 12 ஆயிரம் ஹெக்ரேயரில் விளைச்சலை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுவதுடன் அதற்காகவும் நீரை கவனமாகப் பயன்படுத்த வேண்டியுள்ளது.

அதேபோல் மேலதிக விளைச்சல் குறித்து அக்கறை காண்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன்போது சோளம், கோதுமை, உருளைக் கிழங்கு போன்ற விளைச்சல்களில் ஈடுபடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக விவசாய இராஜாங்க அமைச்சர் மொஹான் பிரியதர்ஷன டி சில்வா தெரிவித்துள்ளார். (அ)

## தெற்காசியாவில்...

அவர் கூறினார்.

தேசிய உள்நாட்டு மருத்துவ தினத்தை முன்னிட்டு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் மற்றும் புற்றுநோய் உள்ளிட்ட நோய்கள் நாட்டு மக்கள் மத்தியில் அதிகரித்துள்ளன. இவை தொடர்பில் மக்களுக்கு தொடர்ந்தும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும்.

நாட்டில் சீனி பாவனை அதிகமாகக் காணப்படுவதே நீரிழிவு நோய்க்கான பிரதானமான காரணமாகக் கண்டறியப்பட்டுள்ளது. தாய்ப்பாலில் சீனி கிடையாது. எனினும் குழந்தைகள் பிறந்து சில மாதங்களின் பின்னர் பெற்றோர் குழந்தைகளுக்கு சீனி அடங்கிய உணவுகளை வழங்குகின்றனர். இதன் காரணமாக இன்று நீரிழிவு நோய் மட்டம் பெருமளவில் உயர்வடைந்துள்ளது. தெற்காசியவில் அதிகளவான நீரிழிவு நோயாளர்கள் காணப்படும் நாடாக இலங்கை இனங்காணப்பட்டுள்ளது.

அதிகளவான சீனி பாவனை உடல் நலத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதோடு, மறுபுறம் தேசிய பொருளாதாரத்திலும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

அத்தோடு, பால் மாவையும் நாம் அதிகமாகப் பயன்படுத்துகின்றோம். உலகில் அதிகளவு பால் மாவை பயன்படுத்தும் நாடாக இலங்கை காணப்படுகிறது. இவ்வாறு பால் மா பாவனையைக் குறைத்தால் அது சுகாதாரத்துக்கும் பொருளாதாரத்துக்கும் நன்மையாகும் - என்றார். (ஐ)

## கடலில்...

மீனவர்களின் உதவியுடன் அவர் கரைக்கு கொண்டுவரப்பட்டு, பியர் பகுதியிலுள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் மன்னார் பொது மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு நேற்று பிரேத பரிசோதனைகள் இடம்பெற்றன.

56 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்தார். தலைமன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## அடுத்த...

முற்பகல் 11 மணிக்கு நல்லூர் கோயில் வீதியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெறும் என்றும் கூறியுள்ளார்.

இந்தக் கூட்டத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர்களான - இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சிவஞானம் சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், புளொட் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலோ தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், வரலாற்றுத்துறை வாழ்நாள் பேராசிரியரும் யாழ். பல்கலைக்கழக வேந்தருமான சி. பத்மநாதன், வரலாற்றுத்துறை வாழ்நாள் பேராசிரியர் ப. புஷ்பரட்ணம் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிய வருகின்றது. (ஐ)

# பெண்ணிடம் சங்கிலி அறுப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 14

பொலிஸ் நிலையத்திலிருந்து சுமார் 250 மீற்றர் தூரத்தில் பெண்ணின் தங்கச் சங்கலியை மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் அறுத்துச் சென்றனர் என்று வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திலிருந்து சுமார் 250 மீற்றர் தொலைவில் அராலி துறை வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தனது பிள்ளையை கல்வி நிலையத்துக்கு கொண்டு சென்றுவிட்டுவிட்டு திரும்பிய பெண்ணின் தங்கச்சங்கிலியே இவ்வாறு அறுக்கப்பட்டது. அபகரிக்கப்பட்ட சங்கலி சுமார் 3 இலட்சம் ரூபாய் மதிப்புமிக்கது என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

# எனது கணவரின் மரணத்துக்கு கடற்படையினருமே காரணம்!

### கொலையானோரின் மனைவி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 14

எனது கணவரின் மரணத்துக்கு காரைநகர் கடற்படையினரும் காரணம் என்று வட்டுக்கோட்டையில் கடத்தப்பட்டு வெட்டிக் கொல்லப்பட்ட இளம் குடும்பஸ்தரின் மனைவி குற்றஞ்சாட்டியுள்ளார்.

வட்டுக்கோட்டை - மாவடியை சேர்ந்த பவித்திரன் (வயது 23) என்ற இளைஞர் கடந்த திங்கட்கிழமை நள்ளிரவை அண்மித்த நேரத்தில் கடத்தப்பட்டு வெட்டிக் கொல்லப்பட்டார். இந்த நிலையில், இது தொடர்பில் அவரின் மனைவி கருத்து வெளியிடுகையில்,

"காரைநகருக்கு சென்றுவிட்டு, மோட்டார் சைக்கிளில் நானும் எனது கணவரும் வீடு திரும்பிக்கொண்டிருந்த வேளையில், பொன்னாலை பாலத்துக்கு அருகில் எம்மை வழிமறித்த கும்பல் வாகனத்தில் கடத்த முயற்சித்தது.

அந்தவேளை, நானும் கணவரும் அவர்களிடம் இருந்து தப்பித்து அருகில் இருந்த கடற்படை முகாமுக்குள் தஞ்சம் புகுந்தோம். கடற்படையினர் எம்மை அங்கிருந்து விரட்டினார்கள்.

"எங்களை கடத்த போறாங்க, எங்களை காப்பாற்றுங்கள்" என கடற்படையிடம் மன்றாடினோம். ஆனால், அவர்கள் எங்களை முகாமில் இருந்து துரத்தினார்கள்.

"அவ்வேளையிலேயே எம்மை அவர்கள் வாகனத்தில் கடத்திச் சென்றனர். கடற்படையினர் மனிதாபிமானத்துடன் நடந்து கொண்டு, எமக்கு அடைக்கலம் கொடுத்திருந்தால், எனது கணவரின் உயிர் பிரிந்திருக்காது. எனது கணவரின் சாவுக்கு கடற்படையும் ஒரு விதத்தில் காரணம் - என்றார்.

இதேவேளை, கொல்லப்பட்டவரின் இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெற்றன.

## ஐ.எம்.எவ்....

பிரிவின் பணிப்பாளர் அர்விந்த் கணேசன் ஆகியோர் கடிதம் மூலம் வலியுறுத்தினர்.

மேலும்,

சிவில் சமூக இடைவெளியைத் தீவிரமாக மட்டுப்படுத்துவதுடன், சர்வதேச நாணய நிதியத்தின் உதவிச் செயல்திட்ட அமுலாக்கத்தை செயலிழக்கச் செய்யக்கூடிய வகையில் இலங்கையால் தயாரிக்கப்பட்டுவரும் புதிய சட்ட வரைவுகளைக் கைவிடுமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்தவேண்டும்.

நல்லாட்சியை மேம்படுத்துவதிலும் ஊழலை இல்லாதொழிப்பதிலும் சிவில் சமூகத்தின் வகிபாகம் மிகமுக்கியம். எனினும்ஈ அடிப்படை சுதந்திரத்தை மட்டுப்படுத்தும் நோக்கில் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்ட அண்மையகால நடவடிக்கையே உத்தேச அரச சார்பற்ற அமைப்புகள் தொடர்பான (பதிவுசெய்தல் மற்றும் கண்காணித்தல்) சட்டமூலமாகும்.

அரசாங்கத்தால் அளிக்கப்பட்ட மறுசீரமைப்புசார் உத்தரவாதங்களுக்கு அமைய சர்வதேச நாணய நிதியத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்ட சுமார் 300 கோடி டொலர் பெறுமதியான உதவித் திட்டமானது கடந்த 2022 ஆம் ஆண்டு கடன்களை மீளச் செலுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்ட இலங்கை, அப்பொருளாதார நெருக்கடியிலிருந்து உடனடியாக வெளிவருவதற்கு உதவியது.

இருப்பினும் அடிப்படை உரிமைகளை மிகத்தீவிரமாக மட்டுப்படுத்தக் கூடியவகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் அடுத்தகட்ட முன்னேற்றத்துக்கு அச்சுறுத்தலாக அமைந்தது.

கடந்த ஜனவரி மாதம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலைக்காப்பு சட்டமானது கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை வெகுவாகக் கட்டுப்படுத்தக்கூடிய வகையிலான சரத்துகளை உள்ளடக்கியுள்ளது.

இதேபோன்று தற்போது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட் டிருக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலமானது கருத்து வெளிப்படுத்தலுடன் தொடர்புடைய புதிய குற்றங் களையும், கைது செய்வதற்குரிய தன்னிச் சையான அதிகாரங்களையும் கொண்டிருக்கின்றது.

அடுத்ததாக அரச சார்பற்ற அமைப்புகளை ஒழுங்குபடுத்துவதற்கு முன்மொழியப்பட்டிருக்கும் சட்டமூலம் நிறைவேற்றப்படும் பட்சத்தில் இலங்கையில் சிவில் சமூக செயல்பாடுகளை சுதந்திரமான முன்னெடுக்க முடியாத நிலை ஏற்படக்கூடும்.

நாடு கடந்த 2022 ஆம் ஆண்டு மிகத்தீவிர பொருளாதார சீர்குலைவுக்கு முகங்கொடுத்திருந்த வேளையில், இலங்கையர்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு நல்லாட்சியை உறுதிப்படுத்துமாறும், ஊழல் மோசடிகளை முடிவுக்குக் கொண்டுவருமாறும் வலியுறுத்தினர்.

இருப்பினும் தற்போது மனித உரிமைகளுக்கு அச்சுறுத்தல் விளைவிக்கக்கூடியதும், சாதக மறுசீரமைப்புக்களில் பின்னடைவை ஏற்படுத்தக்கூடியதுமான மிகமோசமான சட்டங்களும், கொள்கைகளுமே வகுக்கப்பட்டு வருகின்றன.

நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற மக்கள் போராட்டங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சிப் பீடமேறுவதற்கு உதவின. ஆனால் ஜனாதிபதி மக்களின் குரலுக்கு செவிசாய்ப்பதற்குப் பதிலாக, அமைதியான முறையிலான கருத்து வெளிப்பாட்டை ஒடுக்க முற்படுகின்றார்.

சர்வதேச நாணய நிதியம் உள்ளடங்கலாக இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு உதவும் சர்வதேசப் பங்காளிகள், இப்பொருளாதார நெருக்கடிக்கு தவறான ஆட்சி நிர்வாகமும், ஊழல் மோசடிகளுமே பிரதான காரணம் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

எனவே, அவர்களின் முயற்சிகள் வெற்றியடைய வேண்டுமேயானால், அடிப்படை சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை ஒடுக்கக்கூடிய வகையில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு எதிரான நிலைப்பாட்டில் அவர்கள் உறுதியாக இருக்கவேண்டும் - என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# பாதாள உலகக் குழுக்களுக்கு புரியும் மொழியில் பதில்!

### பொலிஸ் மா அதிபர்

கொழும்பு, மார்ச் 14

பாதாள உலக செயல்பாடுகளில் ஈடுபடும் நபர்களுக்கு புரியும் மொழியில் பதில் வழங்கத் தயாராக உள்ளார் என்று பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

காலி - அம்பலாங்கொடை மற்றும் அதனை சூழவுள்ள பிரதேசங்களில் அண்மையில் இடம்பெற்ற பாதாள உலகக் குழுவினரின் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் பல அப்பாவிகள் பலியாகினர்.

தற்போது நடைமுறையில் உள்ள பாதுகாப்பு வேலைத்திட்டத்தில் மாற்றம் தேவையென்றால் அதற்குத் தயங்கப் போவதில்லை எனவும் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார். (ஐ)

## புதிய...

கடந்த சில வாரங்களாக, மாணவர்கள் இது தொடர்பில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டனர்.

எனவே, கல்வி அமைச்சிடம் தேசிய கல்வியியல் கல்லூரி வர்த்தமானி தொடர்பில் வினவிய போது, வர்த்தமானி அறிவித்தல் நாளை வெளியாகும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## வவுனியா...

என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெடுக்குநாறி மலை யில் சிவராத்திரி தினத் தன்று கைது செய்யப் பட்ட எண்மர் நீதிமன்ற உத்தரவின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளனர். இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டவர்களில் ஐந்து பேர் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்

என்று நேற்று அவர்களை சந்தித்த அவர் களின் உறவினர்களும் கஜேந்திரன் எம். பியும் ஊடகங்களுக்கு தெரிவித்தனர்.

இந்த நிலையில், இதனை மறுத்துள்ள சிறைச்சாலைகள் பேச்சாளர், சிறைக்காவலில் உள்ளவர்கள் உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்தனர். இதனால் அவர்கள் காலை உணவை உட்கொள்ளவில்லை. அவர்கள் (நேற்று) மதியவேளை உணவை உட்கொண்டனர் - என்று கூறினார். (ஐ)

## 33வீதமான...

வெளிப்படைத்தன்மை மற்றும் நிர்வாகத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட சட்டங்களை இயற்றுவதற்கான உறுதிப்பாடுகள் இதில் அடங்குகின்றன - என்றும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதி தொடர்பான இரண்டாவது மீளாய்வுக்காக நாட்டுக்கு வருகை தந்துள்ள பிரதிநிதிகள் பல்வேறு தரப்பினருடன் பேச்சு நடத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இளம்...

தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கொலை தொடர்பில் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் வைத்து நால்வரும் நேற்றைய தினம் ஒருவருமாக ஐவர் கைது செய்யப்பட்டனர். கைதானவர்கள் அனைவரும் அராலி பகுதியை சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## சிவலிங்கம்...

வருகின்றன என்று தெரிவித்துள்ள இராணுவத்தினர் அவ்வாறு ஒரு முறை வந்தபோதே இந்தக் காணொலி எடுக்கப்பட்டதாகவும் அந்தக் கோயிலை கவனமாக பராமரிக்குமாறும் காணி உரிமையாளரிடம் இராணுவம் காணொலி மூலம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# கிளிநொச்சி விபத்து; ஒருவர் உயிரிழப்பு!

கிளிநொச்சி, மார்ச் 14

கிளிநொச்சி பொன்னகர் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகம் அமைந்துள்ள பகுதிக்கு அருகில் மோட்டார் சைக்கிளொன்றை ரிப்பர் வாகனம் மோதியதிலேயே குறித்த விபத்து சம்பவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் விபத்தில் உயிரிழந்தவர் பொன்னகர் பகுதியை சேர்ந்த 34 வயதான சந்தானம் புஸ்பராசா எனத் தெரிய வந்துள்ளது.

அத்துடன் உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்படவுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# அரிசி விலை குறைப்பில் தோற்றுவிட்டது அரசு!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 14

சந்தையில் அரிசியின் விலையை குறைக்கும் செயல்பாட்டில் அரசாங்கம் தோற்றுப்போயுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இறக்குமதி செய்யப்பட்ட அரிசி இருப்புக்கள் மற்றும் பெரும் போக பருவத்தில் பெறப்பட்ட அரிசி கையிருப்புகளை சந்தைக்கு முறையாக விநியோகிக்க தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும். எதிர்வரும் சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டின்போது அரிசியின் விலையை நியாயமான விலைக்கு கொண்டு வருவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

நாட்டின் பொருளாதார முகாமைத்துவம் சரியாகச் செயற்படுமாயின் இந்நாட்டில் அரிசியின் விலை இந்நேரம் குறைக்கப்பட்டிருக்கவேண்டும்.

குறைந்த விலையில் அரிசி வழங்கும் திறன் அரசுக்கு உள்ளது. தேவையான வேலைத்திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கிறோம் - என்றார். (அ)

# மோப்ப நாய்கள் கொண்டு விசுவமடுவில் சோதனை!



முல்லைத்தீவு, மார்ச் 14

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் எண்ணக்கருவிற்கு அமைவாக நாடளாவிய ரீதியில் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக பொலிஸாரினால் 'யுக்திய' எனும் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறித்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின் ஓர் அங்கமாக, புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விசுவமடுப் பகுதியில் பொலிஸார் மற்றும் அதிரடிப் படையினர் மோப்ப நாயின் உதவியுடன் நேற்று வீதிகளில் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இதன்போது குறித்த வீதியில் பயணித்த வாகனங்கள் மறிக்கப்பட்டதுடன் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் சோதனைகளை மேற்கொண்ட பின்னர் குறித்த வாகனங்களை தொடர்ந்து பயணிப்பதற்கு அனுமதி அளித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கனடா செல்லவுள்ள அநுரவுடன் அந்நாட்டு தூதுவர் நேற்று பேச்சு



கொழும்பு, மார்ச் 14

**இலங்கைக்கான கனேடிய தூதுவர் எரிக் வோல்ஷ் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று மக்கள் விடுதலை முன்னணியின் அலுவலகத்தில் இடம்பெற்றது.**

இந்த சந்திப்பில் இலங்கைக்கான கனேடிய தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் (அரசியல்) பெற்றிக் பிக்கரிங்கும் தேசிய மக்கள் சக்தியின் சார்பாக விஜித ஹேரத்தும் பங்கேற்றனர்.

இன்றளவில் இலங்கையில் நிலவுகின்ற சமூக பொருளாதார மற்றும் அரசியல் நிலைமை பற்றி விரிவான உரையாடல் இடம்பெற்றதோடு தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்கான தேசிய மக்கள் சக்தியின் திட்டங்கள் பற்றியும் இருதரப்பினருக்கும் இடையில் கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

கனடாவில் வசிக்கின்ற இலங்கையரை சந்திப்பதற்கான அநுர குமார திசாநாயக்கவின் கனடா விஜயத்திற்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளவும் தூதுவர் இதனை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக்கொண்டார். (அ)

# இளம் குடும்பஸ்தரின் கொலைக்கு பயன்படுத்திய கார் அராலியில் மீட்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 14

பொன்னாலை கடற்படை முகாமுக்கு அருகில் இருந்து கடந்த திங்கட்கிழமை 23 வயதுடைய தவச்செல்வம் பவித்திரன் என்ற குடும்பஸ்தர் கடத்தப்பட்டு வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட நிலையில் - கொலை செய்வதற்கு பயன்படுத்திய கார் அராலி மேற்கு நொச்சிக்காட்டு பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் உள்ள வீடு ஒன்றில் இருந்து, யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

அவ்விடத்திற்கு விரைந்த தடயவியல் பொலிஸாரும் தடயங்களை சேகரித்து வருகின்றனர்.

குறித்த குடும்பஸ்தர் மீது, காரில் வைத்தே தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. பாவனையற்ற வீடு ஒன்றிற்கு முன்னால் இருந்து இந்த கார் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த கார் நீண்ட காலம் பாவனை இல்லாமல் இருந்தது போல் தூசி படிந்தவாறு காணப்படுவதுடன், காரின் உள்ளே இரத்தக்கறையும், கொட்டன்களும் காணப்பட்டன. (அ)

# இந்த மாத இறுதிப் பகுதியில் புதிய கிராம சேவகர் நியமனம்

## பிரதமர் திட்டவட்டம்




கொழும்பு, மார்ச் 14

கிராம சேவகர் பற்றாக்குறை காணப்படும் அனைத்து கிராம சேவகர் பிரிவுகளுக்கும் இம்மாத இறுதிப்பகுதியில் புதிதாக கிராம சேவகர்கள் நியமிக்கப்படவுள்ளதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சரும், பிரதமருமான தினேஸ் குணவர்தன தெரிவித்தார்.

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் நிதியொதுக்கீட்டில் புத்தளம் மாவட்டத்தின் முந்தல் பிரதேச செயலகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடத்தை மக்கள் பாவனைக்காக திறந்துவைத்து உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது நாடு பொருளாதார ரீதியாக கடும் நெருக்கடியை எதிர்நோக்கிய போதுதான் ஜனாதிபதி ரணில் நாட்டை பொறுப்பெடுத்தார்.

இதன்போது அரச ஊழியர்களை குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்து வருவதாக பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதனால் அரச ஊழியர்கள் அச்சமடைந்தனர்.

எனினும் ஜனாதிபதியின் ஆலோசனையில் விசேட வழிமுறைகளை உருவாக்கி அரச ஊழியர்களை குறைக்காமல், வரவு-செலவு திட்டத்தில் அவர்களுக்கு கொடுப்பனவை அதிகரித்துக் கொடுத்தோம்.

ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் அரச ஊழியர்களுக்கு விஷேட கொடுப்பனவு ஒன்றை வழங்க முடிவு எட்டப்பட்டுள்ளது.

அதுபோல பாடசாலையில் கற்று முன்னோக்கி செல்ல முடியாத மாணவர்களுக்கு அவர்களின் திறமைக்கு ஏற்ப விஷேட பயிற்சிகளை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மக்கள் எதிர்நோக்கி வந்த பிரச்சினைகள் எல்லோருக்கும் தெரியும். அதனை நான் மீண்டும் ஞாபகப்படுத்த விரும்பவில்லை. எனி னும் இப்போது அந்த பிரச்னைகள் ஓரளவுக்கு குறைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாடுகளுடன் நட்பு ரீதியாக தொடர்புகளை ஏற்படுத்தி எமது நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த பல திட்டங்களை வகுத்து செயற்பட்டுக்கொண்டிருக்கிறோம்.

இப்போது நாட்டில் மாகாண சபை , உறுப்பினர்கள் இல்லாமல் மாகாண ஆளுநர்களின் தலைமையில் மக்களுக்கான அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மாகாண ஆளுநர்களின் மேற்பார்வையில் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் ஊடாக கிராமங்களுக்கான பணிகளை முன்னெடுக்க மாவட்ட செயலாளர்களும், பிரதேச செயலாளர்களும் அவர்களுக்கு கீழ் பணியாற்றி வரும் அரச ஊழியர்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

மக்களின் பிரச்னைகளை அடையாளம் கண்டு அதற்கு உரிய முறையில் தீர்வுகளை பெற்றுக் கொடுக்க மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் ஊடாக உரிய முறையில் வேலைத் திட்டங்களை முன்னெடுக்க முயற்சிக்க வேண்டும்.

எமது நாட்டில் பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம சேவையாளர்களுக்கு பற்றாக்குறை காணப்படுகிறது. அவற்றை நிவர்த்திக்க நாம் நடவடிக்கைகள் எடுத்துள்ளோம்.

இந்த மாதத்திற்குள் கிராம சேவகர் போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கான நேர்முகத் தேர்வு இடம்பெறும். அதன் பின்னர், பற்றாக்குறையாக உள்ள அனைத்து கிராம சேவையாளர் பிரிவுகளுக்கும் புதிதாக கிராம சேவகர்களை நியமிக்க உள்நாட்டலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.03.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



ரி - 20 உலகக் கிண்ணம்:

## இந்திய அணியில் கோலிக்கு இடமில்லை?

மும்பை, மார்ச் 14

இருபது - 20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் எதிர்வரும் ஜூன் மாதம் அமெரிக்கா மற்றும் மேற்கிந்தியத்தீவுகளில் நடக்கவுள்ளது. இதற்கான இந்திய அணியில் முன்னணி துடுப்பாட்ட வீரர் விராட் கோலி நீக்கப்படுவார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

விராட் கோலியும் ரோஹித் சர்மாவும் ஓராண்டுக்கு மேலாக சர்வதேச 20 ஓவர் பேட்டியில் இருந்து ஒதுங்கி இருந்தனர். ஆனால், ஹார்திக் பாண்ட்யா, சூர்யகுமார் ஆகியோர் காயத்தில் சிக்கியதால் வேறு வழியின்றி ரோஹித் சர்மாவும் விராட் கோலியும் கடந்த ஜனவரி மாதம் நடந்த ஆப்கானிஸ்தானுக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட 20 ஓவர் தொடருக்கு அழைக்கப்பட்டனர்.

இதில் கடைசி ஆட்டத்தில் ரோகித் சர்மா சதம் அடித்து அசத்தினர். விராட் கோலி இரு போட்டிகளில் களம் இறங்கி (29 ஓட்டங்கள் மற்றும் 0 ) சோபிக்கவில்லை. ரோஹித் சர்மாவை பொறுத்தவரை 20 ஓவர் உலகக் கிண்ணப் போட்டிக்கான இந்திய அணியின் தலைவராக இருப்பார் என்று கிரிக்கெட் சபை அறிவித்துவிட்டது.

ஆனால் 35 வயதான விராட் கோலியின் இடம்தான் கேள்விக்குறியாகி உள்ளது. மேற்கிந்தியத் தீவுகளில் உள்ள மெதுவான ஆடுகளங்கள் விராட் கோலியின் துடுப்பாட்ட ஸ்ரைலுக்கு உகந்த மாதிரி இருக்காது என்று தெரிவுக் குழு கருதுகிறது. அதனால் கோலிக்கு இப்போதைக்கு 20 ஓவர் போட்டி அணியில் இடமில்லை என்பது தெளிவாகிறது.

## ராஜஸ்தான் அணியிலிருந்து மற்றொரு வீரரும் விலகல்!



ஜெய்ப்பூர், மார்ச் 14

எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பமாகும் ஐ. பி. எல். தொடரில் காயம் காரணமாக ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் இந்திய வேகப்பந்து வீச்சாளர் பிரசித் கிருஷ்ணா வரும் ஐ. பி. எல். தொடரிலிருந்து விலகியுள்ளார்.

அண்மையில் சத்திர சிகிச்சைக்கு உட்பட்டமையாலேயே அவர் அணியிலிருந்து விலகியுள்ளார்.

கடந்த 2022ஆம் ஆண்டு வீரர்கள் ஏலத்தில் பிரசித் கிருஷ்ணாவை ரூ.10 கோடிக்கு ராஜஸ்தான் றோயல்ஸ் அணி ஏலம் எடுத்திருந்த நிலையில், கடந்த தொடரில் காயம் காரணமாக விளையாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரோஹித்தை புகழ்ந்த அஸ்வின்!

பெங்களூர், மார்ச் 14

கடந்த பெப்ரவரி 16ஆம் திகதி இரவு இங்கிலாந்து அணிக்கு எதிரான ராஜ்கோட் டெஸ்ட் போட்டியில் இருந்து விலகி சென்னை திரும்பி இருந்தார் அஸ்வின். அவரின் தாயாருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டது. அந்த இக்கட்டான தருணத்தில் தனக்கு அணியின் தலைவர் ரோஹித் சர்மா, உதவியது குறித்து இப்போது அஸ்வின் நினைவுகூர்ந்துள்ளார்.

“நான் அம்மாவை பார்த்து விட்டு வரலாம் என நினைத்திருந்தேன். மருத்துவர்கள் அவரை பார்க்க முடியாது என சொல்லி இருந்தார்கள். என்னால் அதைத் தாங்க முடியவில்லை. கலங்கி நின்றேன். சென்னை திரும்ப விமான ரிக்கெற் பதிவு செய்ய முயன்றேன். ஆனால், ராஜ்கோட்டில் மாலை 6 மணிக்கு மேல் விமானம் ஏதும் இல்லை என தெரிந்தது.

நான் என்ன செய்வது என புரியாமல் நின்றேன். அப்போது எனது அறைக்கு ரோஹித் மற்றும் ராகுல் டிராவிட் வந்திருந்தனர். நான் யோசித்துக் கொண்டிருந்தை பார்த்த ரோஹித், ‘என்ன யோசிக்கிறாய். முதலில் நீ கிளம்பு. குடும்பத்தோடு இருப்பதுதான் சரியான விஷயம். நான் தனி விமானம் ஏற்பாடு செய்யுறேன்’ என சொன்னார். அதற்கான வேலையை உடனே செய்தார் அவர்களது பேச்சு எனது சிந்தனையை மாற்றியது.

அப்போது ஒன்று யோசித்தேன். நானே ஒருவேளை தலைவராக இருந்து, அணியின் வீரர் இந்த நிலையில் இருந்தால் குடும்பத்தினரை போய் பார்த்துவிட்டு வர சொல்வேன். ஆனால், அந்த வீரர் என்ன செய்கிறார். எப்படி இருக்கிறார். துணையாக ஒருவரை அனுப்புவது எல்லாம் நம்பமுடியாத செயல். அந்த நாளில் ரோஹித்



துக்குள் இருக்கும் ஆகச்சிறந்த தலைமைப் பண்பை நான் பார்த்தேன்.

பல ஆண்டுகளாக பல்வேறு அணித் தலைவர்களுடன் நான் விளையாடி உள்ளேன். ஆனால், ரோஹித் வசம் ஏதோ ஒன்று உள்ளது. அந்த பெரிய மனசு இருக்குற காரணத்துனால தான் அவரால் ஐந்து முறை ஐ. பி. எல். கிண்ணத்தை வெல்ல முடிந்தது என நினைக்கிறேன். டோனிக்கு நிகரான சாதனை. அது அவ்வளவு எளிய காரியம் அல்ல. டோனியும் நிறைய பண்ணுவார். ஆனால், ரோஹித் அதற்காக கூடுதல் முயற்சியை போடுகிறார்” என அஸ்வின் தெரிவித்துள்ளார். இதனை சமூக வலைதளத்தில் அவர் பகிர்ந்துள்ளார்.

அண்மையில் டெஸ்ட் கிரிக்கெட்டில் 500 விக்கெட் சாதனையை அஸ்வின் படைத்திருந்தார். ராஜ்கோட் போட்டியில்தான் இந்த சாதனை படைக்கப்பட்டது. தொடர்ந்து தர்மசாலாவில் நடைபெற்ற போட்டி அவரது 100ஆவது டெஸ்ட் போட்டியாக அமைந்தது. (ஐ)

# அயர்லாந்துடனான தொடர்; வென்றது ஆப்கானிஸ்தான்

சார்ஜா, மார்ச் 14

அயர்லாந்து அணியை 117 ஓட்டங்களால் வீழ்த்திய ஆப்கானிஸ்தான் அணி அந்த அணிக்கு எதிரான தொடரையும் வெற்றி கொண்டது.

ஆப்கானிஸ்தான் - அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சார்ஜாவில் நடைபெற்றது. இதில் 2 போட்டிகள் நிறைவடைந்த நிலையில் ஆப்கானிஸ்தான் அணி 1-0 என தொடரில் முன்னிலையில் இருந்தது. 2ஆவது போட்டி மழையால் தடைப்பட்டது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது ஒருநாள் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தப் போட்டியில் முதலில் ஆடிய ஆப்கானிஸ்தான் அணி 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்களை இழந்து 236 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

ஆப்கானிஸ்தான் தரப்பில் ஷாகிடி 69 ஓட்டங்கள், குர்பாஸ் 51 ஓட்டங்கள் எடுத்தனர்.

அயர்லாந்து தரப்பில் மார்க் அடெய்ர் 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதையடுத்து 237 ஓட்டங்கள் எடுத்தால் தொடரை சமன் செய்யலாம் என்ற நிலையில் அயர்லாந்து அணி களம் இறங்கியது.




அயர்லாந்து அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக பால்பிர்னி, பால் ஸ்டிர்லிங் ஆகியோர் களம் இறங்கினர். இதில் பால்பிர்னி ஓர் ஓட்டத்துடன் ஆட்டம் இழந்தார். இதையடுத்து ஸ்டிர்லிங்குடன் கர்டிஸ் கேம்பர் ஜோடி சேர்ந்தார். இருவரும் நிதானமாக ஆடி ஓட்டங்கள் சேர்த்தனர்.

இதில் ஸ்டிர்லிங் அரைச்சதம் அடித்து அசத்தினார். அவர் 50 ஓட்டங்கள் எடுத்த நிலையிலும், கேம்பர் 43 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். இதையடுத்து களம் இறங்கிய வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இறுதியில் அயர்லாந்து 35 ஓவர்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 119 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

இதன் மூலம் 117 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற ஆப்கானிஸ்தான் தொடரையும் கைப்பற்றி அசத்தியது.

ஆப்கானிஸ்தான் தரப்பில் அபாரமாக பந்துவீசிய முகமது நபி 5 விக்கெட்களும், நங்யால் கரோட்டி 4 விக்கெட்களும் வீழ்த்தினர்.

மகளிர் பிறீமியர் லீக்

# இறுதிக்கு முந்தைய சுற்றுக்கு பெங்களூர் அணி முன்னேற்றம்!

டில்லி, மார்ச் 14

மகளிர் பிறீமியர் லீக் தொடரில் பெங்களூர் அணியும் இறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

பெண்கள் பிறீமியர் லீக் கிரிக்கெட்டின் இரண்டாவது தொடர் கடந்த மாதம் 23ஆம் திகதி தொடங்கியது.

இதில், நேற்று முன்தினம் நடந்த போட்டியில் மும்பை இந்தியன்ஸ் - றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற பெங்களூர் முதலில் பந்து வீச்சை தெரிவு செய்தது. இதையடுத்து களமிறங்கிய மும்பை 19 ஓவரில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 113 ஓட்டங்கள் எடுத்தது.

சிறப்பாக பந்து வீசிய பெங்களூரு அணி வீராங்கனை எல்லிஸ் பெர்ரி 4 ஓவர்களில் 15 ஓட்டங்கள் கொடுத்து 6 விக்கெட்களை வீழ்த்தினார்.

இதனை தொடர்ந்து களமிறங்கிய பெங்களூர் 15 ஓவரில் 3 விக்கெட்களை இழந்து 115 ஓட்டங்கள் எடுத்தது. இதன் மூலம் மும்பையை 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி பெங்களூர் அபார வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் புள்ளிப்பட்டியலில் 3ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ள பெங்களூர் பிளே - ஓவ் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

முன்னதாக, டில்லி, மும்பை ஆகிய அணிகள் ஏற்கனவே பிளே ஓவ் சுற்றுக்கு முன்னேறிவிட்டன என்பது குறிப்பிடத்தக்கது.


(ஐ)



# மோல்டோவா மீதான ரஷ்ய அச்சுறுத்தல்?

# பிரியும் திரான்ஸ்னிஸ்ட்ரியா ரஷ்யாவுடன் இணைவு!

ஐங்கரன் விக்கினேஸ்வரா



மோல்டோவாவின் மேற்கு எல்லைகளில் ரஷ்யா தனது இராணுவ துருப்புக்களை நீண்ட காலமாக நிறுத்தியுள்ளது. கிட்டத்தட்ட 1,500 இராணுவ வீரர்கள் அங்கு நிலை கொண்டுள்ளனர். அவர்களை திரும்ப பெறவேண்டும் என மோல்டோவா வலியுறுத்தியுள்ளது. அதையடுத்து அங்கு கடந்த ஒருவாரமாக பதட்டமான சூழ்நிலை நிலவி வருகிறது.

உக்ரேனுக்கு ஆதரவாக செயற்பட்டு வரும் நாடுகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் பணியை ரஷ்யா தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. அதில் தற்போது உக்ரேனுக்கு அருகே உள்ள சிறிய ஐரோப்பிய நாடானா மோல்டோவா (Moldova) சிக்கிக் கொண்டுள்ளது என மேற்கத்தய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

**ரஷ்யாவுடன் இணையும் திரான்ஸ்னிஸ்ட்ரியா :**

மோல்டோவா ஐரோப்பிய பாராளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறுவதுடன், மோல்டோவா நீண்ட காலமாக ஐரோப்பிய குடும்பத்தில் உறுதியான உறுப்பினராக வேண்டும் என்று முனைந்து வருகிறது. இரு ஆண்டுகளுக்கு முன்னர் ஐரோப்பிய பாராளுமன்றத்தின் உச்சிமாநாட்டின் முடிவு மோல்டோவாவின் காதுகளுக்கு இனித்த இசையாக வந்தது. ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றம் இறுதியாக மோல்டோவா குடியரசிற்கு வேட்பாளர் அந்தஸ்தை வழங்கியது.

ஆனால் ஐரோப்பிய பாராளுமன்றத்தின் முடிவில் அதிருப்தி அடைந்த மோல்டோவாவின் பிரிந்த பிராந்தியம், தற்போது பதிலடி கொடுக்க முடிவு செய்துள்ளது. திரான்ஸ்னிஸ்ட்ரியா (Transnistria) இப்போது ரஷ்யாவுடன் இணைவதாக அறிவித்துள்ளது. திரான்ஸ்னிஸ்ட்ரியாவின் இறையாண்மை பற்றிய அச்சங்கள் அதிகரித்து வரும் நிலைமைகள் காரணமாக ஐரோப்பிய ஒன்றியம் மோல்டோவாவிற்கு அதன் அங்கத்துவத்தை வழங்க முன்வந்துள்ளது.

நீண்ட காலமாக ரஷ்ய சார்பு பிராந்தியமாக இருந்து வரும் திரான்ஸ்னிஸ்ட்ரியா, இப்போது மோல்டோவாவுக்கு ஐரோப்பிய அந்தஸ்து வழங்குவதால் இரு பிராந்தியங்களுக்கு இடையிலான பதட்டங்களை மேலும் அதிகரிக்கும். மோல்டோவாவின் முக்கிய குறிக்கோள் திரான்ஸ்னிஸ்ட்ரியா பிராந்தியத்தை மீண்டும் ஒரு நாட்டிற்குள் ஒருங்கிணைப்பதாகும்.




**ரஷ்யாவின் பூரண ஆதரவு;**

திரான்ஸ்னிஸ்ட்ரியாவின் இந்த முடிவு ரஷ்யாவால் முழு மனதுடன் வரவேற்கப்பட்டுள்ளது. ரஷ்ய கூட்டமைப்பின் மாநில அவை, அங்கீகரிக்கப்படாத திரான்ஸ்னிஸ்ட்ரியா ரஷ்யாவின் ஒரு பகுதியாக மாறுவதற்கான விருப்பத்தை தீவிரமாகக் கருத்தில் கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளது.

அத்துடன், ரஷ்யாவில் சேரவிரும்பிய முன்மொழிவு தொலைதூர எதிர்காலம் பற்றியதும், எதிர்காலத்தில் ஒரு வழிகாட்டும் திசையாகும். எங்களுக்கு நெருக்கமான ரஷ்ய மொழி பேசும் மக்கள் அங்கு வசிப்பதால், இந்த திட்டத்தை நாங்கள் தீவிரமாக ஆதரிப்போம் என்று மாநில அவை உறுப்பினர் மேலும் கூறியுள்ளார்.

வெளிப்படையாக, ரஷ்யா திரான்ஸ்னிஸ்ட்ரியா பிராந்தியத்தை திறந்த கரங்களுடன் ஏற்றுக்கொள்ள தயாராக உள்ளது. இது ஐரோப்பிய ஒன்றியத்தின் முகத்தில் மற்றொரு இறுக்கமான அறையாக கூட இருக்கலாம்.

**திரான்ஸ்னிஸ்ட்ரியா வரலாறு:**

திரான்ஸ்னிஸ்ட்ரியா டினீஸ்டர் ஆற்றின் கிழக்குக் கரைக்கும் உக்ரேனுடனான மோல்டோவாவின் எல்லைக்கும் இடையே உள்ள குறுகிய நிலப்பரப்பாகும். இதில் சுமார் 500,000 இன ரஷ்யர்கள் மற்றும் உக்ரேனியர்கள் வசிக்கின்றனர்.

திரான்ஸ்னிஸ்ட்ரியா 1992ஆம் ஆண்டு முதல் ரஷ்யாவின் ஆதரவு பெற்ற அதிகாரிகளால் நிர்வகிக்கப்படுகிறது.

சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு, புதிதாக சுதந்திரம் பெற்ற மோல்டோவா குடியரசு மற்றும் சோவியத் உறவுகளை பராமரிக்க விரும்பும் படைகள் இடையே மோதல் ஏற்பட்டது. திரான்ஸ்னிஸ்ட்ரிய பிராந்தியத்தில் எப்போதும் 1500 ரஷ்ய அமைதி காக்கும் துருப்புக்கள் நிலை கொண்டுள்ளன.

திரான்ஸ்னிஸ்ட்ரியாவில் இருந்து உக்ரேன் மீது தாக்குதல் நடத்த ரஷ்யா இந்த துருப்புக்களை பயன்படுத்தக்கூடும் அல்லது குறைந்தபட்சம் உக்ரேனில் போராடும் ரஷ்ய வீரர்களுக்கு மனிதாபிமான உதவியை வழங்க இப்பிராந்தியத்தை பின்தளமாக ரஷ்யா வைத்துள்ளது என்று கீவ்வில் உள்ள உக்ரேனிய அதிகாரிகள் அஞ்சுகின்றனர்.

(16ம் பக்கம் பார்க்க)





# சாந்தனுக்குச் செய்யும் உண்மையான அஞ்சலி எது?

நிலாந்தன்



சாந்தனின் உடல்... இந்தியாவுக்கும் ஈழத் தமிழர்களுக்கும் தமிழகத்திற்கும் ஈழத் தமிழர்களுக்கும் இடையிலான கசப்புணர்வை அதிகப்படுத்தியிருக்கின்றது. அதை இலங்கை அரசாங்கம் விரும்பியிருந்திருக்கும். அந்த உடல் வடக்கிற்கு கொண்டு வரப்பட்ட அதே காலப்பகுதியில், இம்மாதம் முதலாம் திகதி யாழ்ப்பாணத்தின் தீவுப் பகுதிகளில் மூன்று தீவுகளில் மீளப் புதுப்பிக்கும் எரிசக்தி திட்டங்களை இந்தியக் கொம்பனிகளுக்கு வழங்கும் உடன்படிக்கை கைச்சாத்தாகியது. அவை முன்பு சீனக் கொம்பனிகளுக்கு வழங்கப்படவிருந்தன. இந்தியா அதை விரும்பவில்லை, அதைத் தடுக்கின்றது என்று சீனா மறைமுகமாகக் குற்றம் சாட்டியது. எனினும் நீண்ட இழுபறியின் பின் கடந்த முதலாம் தேதி தான் அதற்குரிய உடன்படிக்கை கைச்சாத்தாகியது. புதிய உடன்படிக்கையின்படி நெடுந்தீவு, அனலைதீவு, நயினா தீவு ஆகிய மூன்று தீவுகளிலும் இந்தியக் கொம்பனிகள் மீளப் புதுப்பிக்கும் எரிசக்தி நிலையங்களை ஸ்தாபிக்கும். அவ்வாறு மூன்று தீவுகளில் இந்திய கொம்பனிகள் கால் பதிக்க உள்ள பின்னயில், கடந்த வாரம் இந்திய மீனவர்களுக்கு எதிராக ஈழத்தமிழ் மீனவர்கள் கடலில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்திருக்கின்றார்கள். எல்லாவற்றையும் கூட்டிக் கழித்து பார்க்கும் பொழுது என்ன தோன்றுகிறது?

சாந்தனின் இறுதி ஊர்வலம் அண்மை ஆண்டுகளில் வடக்கில் நிகழ்ந்த ஒப்பீட்டளவில் அதிகம் சனம் சேர்ந்த ஓர் இறுதி ஊர்வலம் எனலாம். வவனியாவிலிருந்து எல்லங்குளம் வரையிலும் மக்கள் தன்னார்வமாக சாந்தனின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

இறுதி ஊர்வலத்தை அரசியல் கைதிகளுக்கான அமைப்பாகிய “குறையற்றவர்களின் குரல்” என்ற அமைப்பும் “போராளிகள் நலன்புரிச் சங்கம்” என்ற அமைப்பும் பொறுப்பெடுத்தன. அந்த ஊர்வலம் வந்த வழிநெடுக பொதுமக்கள் அமைப்புகள் ஆங்காங்கே திரண்டு அஞ்சலி செலுத்தின. குறிப்பாக வடமராட்சியில் சாந்தனின் தாய்ப் பட்டினத்தில் சனசமூக நிலையங்கள் அதிகம் பங்களிப்பை நல்கின. சாந்தன் உயிரோடு நாடு திரும்பி இங்கே உயிர் நீத்து இருந்திருந்தால், அவருக்கு இத்துணை அனுதாபம் கிடைத்திருக்குமோ தெரியாது. அவர் உயிரற்ற உடலாகத் திரும்பி வந்தமைதான் அவருக்கு கிடைத்த அதிகரித்த அனுதாபத்துக்கு ஒரு காரணம். 33 ஆண்டுகளாக சிறையில் இருந்தவர், தன் தாயைப் பார்ப்பதற்குத் தவித்திருந்த கடைசி நாளில் உயிர் நீத்தமை என்பது அவர் மீதான அனுதாபத்தை அவரின் உடல் மீதான மதிப்பை அதிகப்படுத்தியது. அதுதான் வவனியாவில் இருந்து எல்லங்குளம் வரையிலும் அவருக்கு கிடைத்த மரியாதை.

ஆனால் சாந்தனுக்கு அஞ்சலி செலுத்துவது என்பது அதோடு முடியவில்லை. அவரோடு ஒன்றாகச் சிறப்பு முகாம்களில் இருந்த மேலும் மூவர் இதுவரை விடுவிக்கப்படவில்லை. அவர்களைப் போல பல ஈழத் தமிழர்கள் சிறப்பு முகாம்களில் இப்பொழுதும் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள். கிடைக்கும் புள்ளி விவரங்கள் சரியாக இருந்தால் மொத்தம் நூற்றுக்கும் குறையாத கைதிகளில் சுமார் 70-க்கும் குறையாதவர்கள் ஈழத் தமிழர்கள் என்று கூறப்படுகின்றது. இந்த 70-க்கும் குறையாத ஈழத் தமிழர்களில் பல்வேறு விதமான குற்றங்களை செய்தவர்களும் உண்டு. அரசியல் கைதிகளும் உண்டு. போதைப் பொருள் வியாபாரிகளும் உண்டு. தவிர சிறிய குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டவர்களும் உண்டு. உதாரணமாக ஆதார் அட்டை இல்லாமல் வாகன அனுமதிப் பத்திரம் எடுத்தவர், வெளிநாடு போக முற்படும் ஈழத் தமிழர்களுக்கு பொய்யான ஆவணங்களைத் தயாரித்துக் கொடுப்பவர் போன்றவர்களும் சிறப்பு முகாம்களில் வைக்கப்பட்டிருப்பதாக ஒரு தகவல் தெரிவிக்கின்றது.

இந்தியாவில் சிறப்பு முகாம் என்று தோற்றப்பாடு மாநில அரசாங்கங்களின் கட்டுப்பாட்டின் கீழ் வருகிறது. ஒரு மாநிலத்தில் உரிய பயண ஆவணம் இன்றித் தங்கியிருக்கும் வெளிநாட்டவரை அந்த மாநிலம் தனது கண்காணிப்பின் கீழ் வைத்திருப்பதற்கான ஏற்பாடு அது. ஆனால் ராஜீவ் காந்தி படுகொலை, பத்மநாபா படுகொலை போன்ற சம்பவங்களின் பின்னணியில் தமிழக சிறப்பு முகாம்கள் எனப்படுகின்றவை ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை கொடுமையான அனுபவங்களாகக் கருதப்படுகின்றன.



சிறப்பு முகாம்களில் மட்டுமல்ல, வெவ்வேறு குற்றச்சாட்டுகளின் பெயரில் தமிழகத்தில் கைது செய்யப்படும் ஈழத் தமிழர்கள் கௌரவமாக நடத்தப்படுவதில்லை என்ற ஒரு குற்றச்சாட்டும் உண்டு. அவர்கள் வெளிநாட்டவர்களுக்குரிய மரியாதையோடு நடத்தப்படுவதில்லை என்றும், அவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் கூறுகிறார்கள். ராஜீவ் காந்தி படுகொலை, பத்மநாபா படுகொலை ஆகிய சம்பவங்களின் பின்னர் தமிழகத்தில் கைது செய்யப்படும் ஈழத்தமிழர்கள் கௌரவமாக நடத்தப்படுவதில்லை என்பது ஒரு பொதுவான அவதானிப்பு. தவிர புலம்பெயர்ந்த தமிழர்கள் காசை அள்ளி வீசி எல்லாவற்றையும் செய்யலாம் என்று நம்பும் ஒரு பின்னணியில், ஈழத் தமிழ் கைதிகளை வைத்து அதிகம் உழைக்கலாம் என்ற நம்பிக்கையும் அங்கே உண்டு.

இவ்வாறானது ஒரு பின்னணியில், சாந்தனின் மரணத்தை முன்வைத்து ஒரு அடிப்படையான விஷயத்தை இங்கே சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. பொதுவாக ஒரு நபர் ஒரு வெளிநாட்டில் கைது செய்யப்படும் பொழுது, அவருடைய நலன்களை அவருடைய தாய் நாட்டின் தூதரகம்தான் பொறுப்பேற்கும். வடகடலில் கைது செய்யப்படும் இந்திய மீனவர்களை யாழ்ப்பாணத்தில் உள்ள உப தூதரகமும் கொழும்பில் உள்ள பிரதான தூதரகமும் பொறுப்பேற்கின்றன. அவர்களுடைய நலன்களை இந்தியத் தூதரகம்தான் கவனிக்கும்.

உலகம் முழுவதிலும் இதுதான் வழமை. தமிழகத்தில் இலங்கைக்கான உப தூதரகம் உண்டு. அங்கே தமிழ் அதிகாரிகளும் உண்டு. ஆனாலும் தமிழகத்தில் கைது செய்யப்படும் ஈழத் தமிழர்களின் விடயத்தில் மேற்படி உப தூதரகம் குறிப்பிட்டுச் செல்லக்கூடிய அளவுக்குத் தலையிடுவது கிடையாது. அங்கே ஈழத் தமிழ் கைதிகள் நடத்தப்படும் விதத்தைத் தொகுத்துப் பார்த்தால், ஒரு விமர்சகர் கூறுவது போல, அவர்கள் அரசியல் அனாதைகளாகக் காணப்படுகிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். சாதாரண கைதிகளின் நிலைமையை இப்படி என்றால் அரசியல் கைதிகளின் நிலைமையைச் சொல்லத் தேவையில்லை.

இப்படிப்பட்டதோர் பின்னணியில், தமிழகத்தில் கைது செய்யப்படுகின்ற அல்லது சிறப்பு முகாமும் உட்பட வெவ்வேறு சிறைகளில் சிறை வைக்கப்பட்டிருக்கின்ற ஈழத்தமிழர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கு ஒரு பலமான சட்ட உதவி மையத்தை தமிழகத்தில் திறக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் இருந்து ஒரு கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது. ஈழத் தமிழர்களிடம் நிதிப்பலம் மிக்க ஒரு புலம்பெயர் சமூகம் உண்டு. புலம்பெயர் சமூகத்தின் நிதிப் பங்களிப்போடு தமிழகத்தில் அவ்வாறு ஒரு சட்ட உதவி மையத்தை உருவாக்கினால் என்ன? அச்சட்ட உதவி மையத்தில் வேலை செய்வதற்கு அங்கே பல சட்டத்தரணிகள் தயாராக இருக்கிறார்கள்.

ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட பின்னரும், பத்மநாபாவும் அவருடைய தோழர்களும் கொல்லப்பட்ட பின்னரும், தமிழகத்தில் ஈழ உணர்வாளர்கள் தீக்குளித்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, சிறப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளை தமிழகத்தில் உள்ள சில உணர்வாளர்கள் சந்திப்பதுண்டு. மேலும் சாந்தனும் உட்பட ஈழத்து அரசியல் கைதிகளின் வழக்குகளில் தோன்றுவது தமிழகத்தில் உள்ள ஈழ உணர்வானர்களான வழக்கறிஞர்கள்தான். சாந்தனின் உடலை பொறுப்பெடுத்து நாட்டுக்கு கொண்டு வந்ததும் அப்படி ஒரு வழக்கறிஞர்தான்.

எனவே சாந்தனின் இழப்பை முன்வைத்து தமிழகத்தில் அவ்வாறு ஒரு பலமான சட்ட உதவி மையத்தை உருவாக்குவதைக் குறித்து ஈழத் தமிழர்கள் சிந்திக்க வேண்டும். குறிப்பாக சிறப்பு முகாம்களில் வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளை வெளிப்பதிவு அகதிகளாக மாற்ற வேண்டும் என்ற ஒரு கோரிக்கையும் வைக்கப்படுகிறது.

சாந்தனும் உட்பட அரசியல் கைதிகளின் விடயத்தில் ஈழத்து தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை என்பது ஒரு குற்றச்சாட்டு. அது மட்டுமல்ல, இவர்களில் பலர் தமிழகத்திற்கு செல்வதுண்டு அங்கே தமிழக பிரபல்யங்களை கண்டு அவர்களோடு படம் எடுத்துக் கொள்வதும் உண்டு. ஆனால் இவர்களில் எத்தனை பேர் சிறைகளுக்கும் சிறப்பு முகாம்களுக்கும் அகதி முகாம்களுக்கும் சென்றிருக்கிறார்கள்? அகதிகளோடு படம் எடுத்திருக்கிறார்கள்? ஈழத் தமிழ் கைதிகளை அவர்களுடைய அரசியல் பிரதிநிதிகளை சந்திக்கவில்லை என்று சொன்னால், தமிழக அரசு அவர்களை எப்படி மதிக்கும்?

எனவே இப்பொழுது தமிழகத்தில் மிஞ்சியிருக்கும் அரசியல் கைதிகளும் உட்பட ஏனைய ஈழத் தமிழ் கைதிகளின் விடயத்தில், தமிழ் அரசியல் சமூகம் தெளிவான சில முடிவுகளை எடுக்க வேண்டும். மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று தமிழகத்துக்கு சென்று அங்குள்ள கைதிகளோடு உரையாட வேண்டும். மேலும் அங்கு உள்ள ஈழ உணர்வாளர்களின் உதவியோடு ஒரு சட்ட உதவி மையத்தை உருவாக்க வேண்டும். அதுதான் நடைமுறைச் சாத்தியமான வழி. அதுதான் உடனடிக்குச் செய்ய வேண்டிய வேலையும். அதுதான் சாந்தனுக்குச் செய்யும் உண்மையான அஞ்சலியும்.

(ஆதவன் செய்தி)

# மோல்டோவா மீதான ரஷ்ய அச்சுறுத்தல்?...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

**ரஷ்யா அச்சுறுத்தல்:**

சிக்கலான இந்த பிரச்சனைகளின் பின்னர் மோல்டோவா நாட்டுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் பிரான்ஸ் வழங்கும் என ஜனாதிபதி இம்மானுவல் மக்ரோன் உறுதியளித்துள்ளார். மோல்டோவாவுக்கு அசைக்க முடியாத ஆரதவு வழங்க பிரான்ஸ் தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

கடந்த வாரம் மோல்டோவா நாட்டின் ஜனாதிபதி மய்யா சாந்து (**Maia Sandu**) பிரான்ஸ் வருகை தந்திருந்தார். இரு தலைவர்களும் பாதுகாப்பு அம்சங்கள் தொடர்பில் கலந்துரையாடியிருந்தார்கள்.

அச்சுறுத்தல் விடுக்கும் ரஷ்யாவை எதிர்க்க மோல்டோவா நாட்டுக்கு ஆதரவு வழங்கும் என பிரான்ஸ் தெரிவித்துள்ளது. அதே வேளை மோல்டோவின் மேற்கு எல்லைகளில் ரஷ்யா தனது இராணுவ துருப்புக்களை நிறுத்தியுள்ளது. கிட்டத்தட்ட 1,500 இராணுவ வீரர்கள் அங்கு நிலைகொண்டுள்ளனர். அவர்களை திரும்ப பெறவேண்டும் என மோல்டோவா வலியுறுத்தியுள்ளது. அதையடுத்து அங்கு கடந்த ஒருவாரமாக பதட்டமான சூழ்நிலை நிலவி வருகிறது.

**சோவியத் ஆக்கிரமிப்பில் மோல்டோவா:**

மோல்டோவா குடியரசு (**Republica Moldova**) கிழக்கு ஐரோப்பாவில் நாடுகளால் சூழப்பட்ட ஒரு நாடாகும். இதன் மேற்கே ருமேனியாவும், வடக்கு, கிழக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் உக்ரேனும் அமைந்துள்ளன. 1812இல் இது ரஷ்சியப் பேரரசுடன் இணைக்கப்பட்டு, ரஷ்சியாவின் வீழ்ச்சியின் பின்னர் 1918இல் ருமேனியாவுடன் இணைக்கப்பட்டது.

ஆயினும் 1940 இல் சோவியத் ஆக்கிரமிப்பு மற்றும் இரண்டாம் உலகப் போர் ஆகியவற்றின் பின்னர் இந்நாடு சோவியத் ஒன்றியத்தின் கீழ் மோல்டோவா சோவியத் சோசலிசக் குடியரசு ஆகியது.







பனிப்போர் முடிவில் சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்ட போது ஆகஸ்ட் 27, 1991 இல் இந்நாடு முழுமையாக விடுதலை பெற்றது.

மோல்டோவா ஒரு நாடாளுமன்ற சனநாயக நாடாகும். நாட்டின் தலைவராக சனாதிபதியும் அரசுத் தலைவராக தலைமை அமைச்சரும் உள்ளனர்.

**மோல்டோவாக்கு ஐரோப்பிய ஒன்றிய அந்தஸ்து?**

உக்ரைன் மற்றும் மோல்டோவா ஆகிய நாடுகளை வேட்பாளராக 27 ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளும் அங்கீகரிக்கும் என்று 2022 டிசம்பரில் உறுதியளித்ததாக தகவல்கள் வெளியாகின. ஐரோப்பிய ஒன்றிய வேட்பாளராக விண்ணப்பித்திருக்கும் உக்ரைன் மற்றும் மோல்டோவா ஆகிய நாடுகள் வேட்பாளராக தற்போது அங்கீகரிக்கப்படவுள்ளன.

நேட்டோவில் இணையக் கூடாது என்ற வலியுறுத்தலை ஏற்காததால் உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தது. இந்தநிலையில் உக்ரைனுக்கு நிதி உதவி மற்றும் ஆயுத உதவி செய்து வரும் ஐரோப்பிய ஒன்றியம், அந்நாட்டை உறுப்பினராக சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஐரோப்பிய ஒன்றியம், உறுப்பு நாடுகளுக்கு மட்டுமே நேரடியாக இராணுவ உதவி செய்ய முடியும். எனினும், ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவது என்பது எளிதான காரியம் அல்ல. அதற்கான நடைமுறைகள் முடிந்து இறுதிக்கட்டத்தை அடைய பல ஆண்டு காலம் ஆகும்.

இந்த நிலையில், அந்நாட்டுக்கு நம்பிக்கை அளிக்கும் வகையில் முதலில் வேட்பாளர் அந்தஸ்து வழங்க ஐரோப்பிய ஒன்றியம் முடிவு செய்துள்ளது. அதே போல் மோல்டோவா நாட்டுக்கும் வேட்பாளர் அந்தஸ்து வழங்கப்படுகிறது. ●

